மலர் 3 • இதழ் 6 • அக்டோபர் 2018 • ரூ.15/-

AGARAM FOUNDATION
அறம் செய விரும்பு

# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

## தாய்மொழிக் கல்வியே தரமானது!

## மதிப்புமிக்க மழைநீரை சேமிப்போம்!



ஒரு வேளை
மிஸ் பண்ணிணாலும்...
பீல் பண்ணணும்.........
அதுதான் சக்தி மசாலா !



I ♥ FOOD

சக்தி மசாலா ...
அன்பின் சுவையான
அடையாளம் ...




சக்தி ®
மசாலா
சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்
6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.
போன் : 0424 - 2533601.
E-mail : headoffice@sakthimasala.co.in
www.sakthimasala.com




• சக்தி மசாலா சமையல் பொடி வகைகள் • சக்தி ஊறுகாய் வகைகள் • சக்தி சன் பிளவர் ஆயில் • சக்தி பருப்பு வகைகள்
• சக்தி பஜ்ஜி போண்டா மாவு • சக்தி ராகி மாவு • சக்தி கடலை மாவு • சக்தி அப்பளம் • நெய்

ENGINEERING | ARCHITECTURE | DENTAL | RESEARCH | ARTS & SCIENCE

# YOUR CAREER BEGINS WITH US






**COURSES AVAILABLE**

Aeronautical | Automobile | Bioinformatics | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science and Engineering | Electrical and Electronics | Electronics and Communication | Electronics and Telecommunication | Electronics and Instrumentation | Information Technology | Mechanical | Mechanical and Production | Bachelor of Architecture (B.Arch.) | Bachelor of Dental Surgery (BDS)

100% PLACEMENT OPPORTUNITY

ADMIRABLE INFRASTRUCTURE

WORLD CLASS ACADEMIC AMBIENCE

EMINENT FACULTY

## SATHYABAMA UNIVERSITY

(Established under section 3 of the UGC Act, 1956)
Declared as Category " A " University by MHRD, Government of India

facebook.com/SathyabamaUniversityOfficial | App Store | Google play

Email: entranceexam2016@sathyabamauniversity.ac.in | www.sathyabamauniversity.ac.in

Jeppiaar Nagar, Rajiv Gandhi Salai, Chennai - 600 119.

Phone : Administrative Office: 044-2450 3150 / 51 / 52 / 53 / 54 / 55 | Entrance Exam Office: 044-24502436 | Fax : 044 - 2450 2344

# ‘பால் நினைந்தூட்டும் தாயைப் போல...’



**அனைவருக்கும் அன்பு வணக்கம்.**

அகரம் பவுண்டேஷன் ‘விதை திட்டம்’, உயர்கல்வி பெறும் வாய்ப்பில்லாத பொருளாதார மற்றும் சமூகச் சூழலில் இருக்கும் மாணவர்களைத் தேர்வுசெய்து, அவர்களுக்கு உரிய கல்வி வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. நல்லெண்ணம் கொண்ட நன்கொடையாளர்களின் உதவியுடன் இது சாத்தியமாகிறது. விதை திட்டத்தின் மூலம் உதவிபெறும் மாணவர்களைத் தேர்வு செய்யும் தேர்வுக் குழுவில் வழிகாட்டியாக இருந்து, அகரம் மாணவர்களை தொடர்ந்து ஊக்கப்படுத்தி வருபவர், பேராசிரியர் கல்யாணி அவர்கள். பழங்குடி இருளர் இன மக்களின் வாழ்வு மேம்படவும் அவர் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கிறார்.

சமீபத்தில் ‘பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கம்’ விழுப்புரம் நகரில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பத்தாயிரத்துக்கும் அதிகமான இருளர் இன மக்கள் தங்கள் சொந்த செலவில் பயணம் செய்துவந்து கலந்து கொண்டு, அந்நிகழ்வை பெரிய அளவில் வெற்றியடைய வைத்தனர் என்று பேராசிரியர் குறிப்பிட்டார். ஊருக்கு சில குடும்பங்களாக சிதறிக் கிடக்கிற பழங்குடி இன மக்கள் பத்தாயிரம் பேர் ஒன்றுதிரண்டது மாபெரும் வெற்றியாகப் பார்க்கப்பட்டது.

‘‘இன்றளவும் கூலி வேலைகளுக்குக் கொத்தடிமையாகப் போகிற கல்வியறிவற்ற இருளர் இன மக்கள்கூட, தங்களுடைய பிரச்னைகளுக்காக ஒன்று சேர்கிறார்கள். நாங்கள் கல்வி தொடர்பான எத்தனையோ போராட்டங்களை முன்னெடுத்திருக்கிறோம். ஆனால், தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி கிடைக்கவில்லை என்று தெரிந்தும்கூட, பெற்றோர்கள் எங்களுடன் ஒன்று திரள வரவில்லை’’ என்று தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார் பேராசிரியர் கல்யாணி. கல்வி தொடர்பான எத்தனையோ அரசியல் முடிவுகள் மாணவர்களுக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. ஆனால், பாதிக்கப்படும் தங்கள் பிள்ளைகள் சார்பாகக் குரல் எழுப்ப பெற்றோர்கள் இன்னும் விழிப்பு உணர்வு பெறவில்லை என்பதுதான், கல்விச்சூழல் சீர்கெட்டுக் கிடப்பதற்கு முக்கிய காரணம்.

தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக ஓடி ஓடி உழைக்கிற பெற்றோர்கள்கூட, காசு கொடுத்தாலும் தங்கள் பிள்ளைக்கு நல்ல கல்வி கிடைக்கவில்லை என்பதை உணராதவர்களாக இருக்கிறார்கள். தன் மகளை ‘ஏ.சி வகுப்பறை’ உள்ள பள்ளியில் எல்.கே.ஜி படிக்க இரண்டு லட்ச ரூபாய் கட்டி சேர்த்துவிட்டதாகப் பெருமையாகக் கூறிய இளம் தந்தையைப் பார்க்கும்போது, பரிதாபமாக இருந்தது. காற்றோட்டமான வகுப்பறைகளில் அமர்ந்து



வானத்தை ரசித்தபடி, பறவைகளின் சத்தத்தையும் கேட்டுக்கொண்டு கல்வி கற்கவேண்டிய குழந்தையை, குளிரூட்டப்பட்ட ஓர் அறையில் அடைத்து வைப்பது ஆரோக்கியக் கேடு என்பதை பட்டதாரியான தந்தையே உணரவில்லை.

ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை இருக்கும் தொடக்கப்பள்ளிகளில் குழந்தைகள் கல்வி கற்கும் சூழ்நிலையை ஆய்வு செய்தால் போதும்... கல்விமீது நமக்கு இருக்கும் அக்கறையின்மையையும், குழந்தைகளின் நலன்மீது நமக்கு இருக்கும் அலட்சியத்தையும் நன்கு உணர்ந்து கொள்ளலாம். பதினொன்றாம் வகுப்புப் பாடங்களை பள்ளிகள் நடத்தாமல், மதிப்பெண்களுக்காக பன்னிரண்டாம் வகுப்பு பாடங்களை இரண்டு வருடம் நடத்துகிற கொடுமையை பெற்றோர்கள் நன்கு அறிந்தும், அமைதியாகக் கடந்துதான் போகிறார்கள். கல்வியாளர்கள் பல ஆண்டுகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து, பல தடைகளைத் தாண்டி, பதினொன்றாம் வகுப்புக்குப் பொதுத்தேர்வு முறையினை அரசு கொண்டுவந்தது.

இப்போது ஒரேயொரு அறிவிப்பின் மூலம், பதினொன்றாம் வகுப்பு பொதுத்தேர்வு மதிப்பெண்கள் மேல்படிப்புக்குக் கணக்கில் கொள்ளப்படாது என்று அறிவித்து இருக்கிறார்கள். தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தோடு நெருங்கிய தொடர்பு இருக்கிற இத்தகைய முடிவுகள் பற்றியும் பெரும்பான்மை மக்களுக்கு எந்தக் கருத்தும் இல்லை. 'பதினொன்றாம் வகுப்புக்கு பொதுத் தேர்வு அவசியம்' என்று எடுத்த முடிவு, சில மாதங்களில் அவசியமில்லை என்று அரசு சொல்லும்போது, தமிழகக் கல்விச் சூழலில் எத்தகைய சலனமும் இல்லை.

குடிப்பதற்குத் தகுதியற்ற நீர் குழாயில் வந்தால் தெருவில் இறங்கிப் போராடுகிற நாம், பிள்ளைகளின் எதிர்காலத்துக்குப் பயனற்ற, தீங்கு விளைவிக்கிற கல்விச் சூழலை எதிர்த்து எவ்விதமான கேள்வியும் கேட்பதில்லை. கடவுளின் அன்பை, 'பால் நினைந்தூட்டும் தாயைப் போல' என்று குறிப்பிடுவார்கள். தனக்குப் பசிக்கிறது என்று வாய்திறந்து கேட்கத் தெரியாத குழந்தையின் பசியை உணர்ந்து பாலூட்டுகிற தாயின் அன்புதான், குழந்தையின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு உதவும். ஒவ்வொரு மாணவரின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப்போகிற கல்விச்சூழலை, அத்தகைய தாயின் பரிவோடு நம் குழந்தைகளுக்கு உருவாக்கித் தருவது நம் ஒவ்வொருவரின் கடமை.

அன்புடன்,
**சூர்யா**




# யாதும்

நமது கல்வி - நமது குழல் - நமது பணி

தமிழ் மாத இதழ்
மலர் 3 • இதழ் 6
அக்டோபர் 2018

கௌரவ ஆசிரியர்
**திரு. சூர்யா**

பதிப்பாளர் - ஆசிரியர்
**த.செ.ஞானவேல்**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
தொலைபேசி : 9952920801



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.




Published by T.J.Gnanavel,
on behalf of
Tharu Media (P) Ltd.,
10/55,Raju Street,
West Mambalam,
Chennai - 600 033.
email:
contactyadhum@gmail.com

# மதிப்புமிக்க மழைநீரை சேமிப்போம்!



மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய சில பகுதிகளைத் தவிர, தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களுக்கு வடகிழக்குப் பருவமழையே நீர் ஆதாரம் தரும் அமுதமாக உள்ளது. அக்டோபர் முதல் டிசம்பர் வரை மூன்று மாத காலத்தில் பெய்யும் மழையே ஆண்டுதோறும் நாம் நம்பியிருக்கும் நீர் ஆதாரம்.

நீர்ச் சுழற்சியில் மழையே பூமியின் தேவைக்கு முதன்மையான நீர் ஆதாரம். மழையால் நிரம்பும் ஆறுகள், ஏரிகள், குளங்கள், நிலத்தடி நீர் போன்றவை இரண்டாம் நிலை நீர் ஆதாரங்கள். அதனால்தான் இயற்கை விவசாயிகள், 'நீரை பூமிக்கடியில் தேடாதீர்கள். வானத்திலிருந்து பெறுங்கள்' என்பார்கள். இந்த பூமி சுமார் 70 சதவிகிதம் நீராலானது என்றாலும், இதில் சுமார் 95 சதவிகிதம் கடல்நீரே. இவற்றை நம் தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாது. நன்னீர் நம் பூமியில் சரிவிகிதப் பரவலில் இல்லை. குறிப்பாக, மக்கள்நெருக்கம் அதிகம் இருக்கும் ஆசிய நாடுகளில்தான் தண்ணீர்ப் பற்றாக்குறை மிக அதிகம்.




ஆகவே, நில மேற்பரப்பு நீர் நம்முடைய தேவைகளுக்குப் போதுமானவையாக இல்லை. நாம் நிலத்தடி நீரைச் சார்ந்து இருக்க வேண்டியுள்ளது. நகரமயமாதல், விவசாயத் தேவைகள் போன்ற பல காரணங்களால், நிலத்தடி நீரின் அளவும் வேகமாக குறைகிறது. அதனால் நிலத்தடி நீரின் மட்டத்தை உயர்த்த வேண்டியுள்ளது. இதற்கு ஒரே வழி, மழைநீரை சேமிப்பது.

நம் பூமியில் மண் அடுக்குகளுக்குக் கீழே ஒரு மட்டத்தில் பாறை அடுக்குகள் வருகின்றன. மண் அடுக்கும் பாறை அடுக்கும் இணையும் இடத்தில் மண்ணின் இறுக்கம் குறைவாக இருக்கும். இங்குதான் நிலத்தடி நீர் சேமிக்கப்படுகிறது. இதைத்தான் நாம் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் உறிஞ்சி எடுக்கிறோம். பல ஆயிரம் ஆண்டுகளாக சேர்ந்த நிலத்தடி நீரை நாம் அதிவேகமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். இது எடுக்க எடுக்க மீண்டும் ஊறும் அமுதசுரபி அல்ல. வங்கியில் நாம் சேர்க்கும் சேமிப்பு போன்றது. எடுத்ததும் குறைந்துவிடும். நம் எதிர்காலத் தேவைகளுக்காகவும், நம் எதிர்கால சந்ததிகளுக்காகவும் மீண்டும் சேமிப்பது நம் கடமை.

தமிழ்நாடு அரசு கடந்த 2001-ம் ஆண்டு, மழைநீர் சேமிப்பைக் கட்டாயம் ஆக்கியது. இதற்காக 1920-ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட மற்றும் நகராட்சிகள் சட்டத்திலும், 1973-ம் ஆண்டின் கட்டிட விதிகளிலும் திருத்தங்கள் செய்யப்பட்டன. எல்லா குடியிருப்புகள், வணிக வளாகங்கள், தொழிற்சாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் மழைநீரை சேமிப்பது இதன்மூலம் கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.


மழைநீரை இரண்டுவிதங்களில் சேகரிக்கலாம். ஒன்று, நேரடியாக மழைநீரை கொள்கலன்களில் சேமித்துப் பயன்படுத்துவது. இரண்டு, மழைநீரை இயற்கை முறையில் வடிகட்டி நிலத்தின் அடியில்

ஊறச் செய்வது; அல்லது கிணறு மற்றும் ஆழ்துளைக்கிணறுகளுக்கு அனுப்புவது.

வீட்டின் மொட்டை மாடியில் பெய்யும் மழைநீர், சுவர் ஓரங்களில் இருக்கும் குழாய்கள் வழியே கீழே வருகிறது. இதற்கு ஏற்றபடி மொட்டை மாடியை தயார் செய்து, குழாய்கள் வழியே தண்ணீர் வெளியேறுமாறு செய்திருப்பார்கள். அந்தக் குழாய்கள் தரையைத் தொடும் இடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும்.

மூன்று அடி நீளம், மூன்று அடி அகலம், நான்கரை அடி ஆழமுள்ள குழிகள் தோண்ட வேண்டும். வீட்டைச் சுற்றி இருக்கும் இடத்தைப் பொறுத்து இந்தக் குழிகள் சதுரமாகவோ, செவ்வகமாகவோ, வட்டமாகவோ இருக்கலாம். இந்தத் தொட்டிகளின் அடியில் கருங்கல் அல்லது செங்கல் துண்டுகள், நடுவில் கூழாங்கற்கள், மேலே மணல் என்று கொட்டி நிரப்ப வேண்டும். மழைநீரில் இருக்கும் தூசுகள் மற்றும் அழுக்குகளை இது சுத்தம் செய்துவிடும்.

இந்தத் தொட்டியின் அடிப்பக்கத்தையும், வீட்டில் இருக்கும் கிணறு அல்லது ஆழ்துளைக் கிணறையும் இணைக்கும்விதமாக பூமிக்கு அடியில் குழாய் பதித்துவிடலாம். வடிகட்டப்பட்ட மழைநீர் அப்படியே கிணற்றில் சென்று சேமிப்பாகச் சேர்ந்துவிடும். இப்படி நேரடியாகக் கிணற்றுக்குள் சென்று சேர்க்கும் வசதி இல்லையென்றால், இன்னொரு விதத்தில் சேமிக்கலாம். அதாவது, மழைநீர் சேமிப்புக் குழியின் அடியிலேயே 10 அல்லது 20 மீட்டர் ஆழத்துக்கு ஆழ்துளைக் கிணறு தோண்டி, அதில் மணல் நிரப்பி வைக்கலாம். அதற்குள் தண்ணீர் சென்று பூமிக்குள் ஊறிவிடும்.




மொட்டை மாடியாக இல்லாமல் சாய்வான கூரையுள்ள வீடுகளில் வசிப்பவர்கள், கூரையின் அடிப்புறத்தில் தகர வளைவுகளைப் பொருத்தி மழைநீரை சேமிக்கலாம்.

இதன் பயனைத் தொடர்ந்து பெறுவதற்கு, பருவமழை தொடங்குவதற்கு முன்பாக மக்கள் தங்கள் வீடுகளில் உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நன்கு பராமரித்து வைக்க வேண்டும். மொட்டை மாடியில் சேரும் இலைகள் போன்றவை குழாய்களில் அடைத்துக்கொள்ளாமல் இருக்க, குழாய்களின் வாயிலில் மெல்லிய வலைகளைப் பொருத்த வேண்டும். குழாய்களில் ஓட்டை, விரிசல் அல்லது அடைப்புகள் இருந்தால் அவற்றை சரிசெய்து மழைநீர் வீணாகாமல் முழுவதும் பூமிக்குள் செல்வதை உறுதிசெய்ய வேண்டும். வடிகட்டும் தொட்டிகளில் நிரப்பியுள்ள மணல், கூழாங்கல், கருங்கல் ஆகியவற்றை வெளியே எடுத்து, அவற்றை தண்ணீரால் சுத்தம் செய்தபிறகு, மீண்டும் தொட்டியின் அடியில் கருங்கல், நடுவில் கூழாங்கல், அதன்மேலே மணல் என்ற முறைப்படி நிரப்ப வேண்டும்.

வீட்டைச் சுற்றிய எல்லா பகுதிகளையும் கான்க்ரீட் போட்டு மூடாமல், கொஞ்சம் இடத்திலாவது மண் பரப்பு தெரியுமாறு இயற்கையாக விட வேண்டும். அதுதான் மழைநீர் இயற்கையாக பூமிக்குள் சேகரமாவதை உறுதி செய்யும்.

வீடுகளில் நாம் இப்படிச் சேகரிக்கிறோம் என்றால், நெடுஞ்சாலைகளின் ஓரங்களிலும், பெரிய மத்திய அரசு அலுவலகங்களிலும் மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்தும் பணியைச் செய்கிறது, மத்திய நிலத்தடி நீர் வாரியம். இதற்காக சாலை ஓரங்களில் அகழிகள் போன்ற அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஒரு மீட்டர் முதல் மூன்று மீட்டர் வரை அகலம், மூன்று மீட்டர் ஆழத்தில் இந்த அகழிகள் அமைக்கப்படுகின்றன. அடியில் கருங்கல், நடுவில் கூழாங்கல், மேலே மணல் நிரப்பி இந்த அகழிகள் அமைக்கப்படுகின்றன. சாலையில் வழிந்தோடும் மழைநீர் வந்து சேரும் இடத்தில் இந்த அகழிகள் அமைக்கப்படுவதால், நிலத்தடி நீராக இது சேமிக்கப்படுகிறது.

குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேங்குவதைத் தவிர்க்க, மழைநீர் வடிகால்கள் இப்போது அமைக்கப்படுகின்றன. இதைவிட, மழைநீர் அகழிகளே வெற்றிகரமாக மழைநீரை அகற்றுகின்றன என்பது நிரூபணம் ஆகியுள்ளது. எனவே, உள்ளாட்சி அமைப்புகளுடன் குடியிருப்போர் நலச்சங்கங்கள் இணைந்து இதுபோன்ற முயற்சிகளை மேற்கொள்ளலாம். மழைநாட்களில் மழைநீரும் தேங்காது; எல்லா வீடுகளிலும் நிலத்தடி நீர்மட்டமும் உயரும். ●



# மூடப்படுமா 3,400 பள்ளிகள்?

## நிதியைக் குறைத்த மத்திய அரசு...

சின்னச்சின்ன கிராமங்களில்கூட கான்வென்ட்கள் தொடங்கப்பட்டுவிட்ட இந்தக் காலத்திலும் பல லட்சம் அடித்தட்டுக் குடும்பங்களுக்கு நம்பிக்கையாக இருப்பவை அரசுப்பள்ளிகள்தான். சத்துணவு, சீருடை, புத்தகங்கள், காலணி, சைக்கிள் என அரசு தரும் அனைத்தையும் பெற்று, அரசு தரும் இலவசக்கல்வியைக் கற்கும் லட்சக்கணக்கான குழந்தைகள் தமிழகத்தில் உண்டு.

கிராமப்புறங்களில் போதுமான வசதிகள் இல்லாமல் தொடங்கப்படும் பல தனியார் பள்ளிகளில், மாணவர்களின் உளவியலைப் புரிந்துகொண்டு பாடம் நடத்தும் ஆசிரியர்கள் கிடையாது. அரசுப்பள்ளிகளில் முழுத்தகுதியுள்ள ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பல நவீன வசதிகள் வந்துவிட்டன. கல்விக்கான முழுப்பொறுப்பையும் அரசு ஏற்கிறது. ஆனாலும், பல அரசுப்பள்ளிகளில் சேர்க்கை குறைந்துகொண்டே வருகிறது. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு 1 கோடி மாணவர்கள் படித்த தமிழக அரசுப்பள்ளிகளில் இப்போது சுமார் 40 லட்சம் பேர் மட்டுமே படிக்கிறார்கள். தனியார் பள்ளிகளில் கிடைக்கும் ஆங்கிலவழிக் கல்வி நிறைய பேரை ஈர்க்கிறது என்பது ஒரு காரணம். வாழ்வியல் தேவைகள் காரணமாக கிராமங்களிலிருந்து நிறைய பேர் நகரங்களுக்கு இடம்பெயர்ந்ததும் இன்னொரு காரணம்.

இந்த சூழலில் அரசுப் பள்ளிகளைத் தரம் உயர்த்தி மாணவர் சேர்க்கையை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டிய அரசு, மறைமுகமாக தனியார் பள்ளிகளை ஊக்குவிக்கிறது. இதன் அடுத்த கட்ட அபாயமாக, 3,400 அரசுப் பள்ளிகளை மூட வேண்டிய சூழலில் தமிழக அரசு உள்ளதாக செய்திகள் வெளிவருகின்றன.

நரேந்திர மோடி பிரதமராகப் பொறுப்பேற்றதும், மத்திய திட்டக் குழுவுக்குப் பதிலாக 'நிதி ஆயோக்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். தொழில், சுகாதாரம், போக்குவரத்து என்று சேவைத் துறைகளில் அரசு ஈடுபடுவதைக் குறைத்துக்கொள்ளும்விதமாக அடுத்தடுத்து பல முடிவுகளை எடுத்திருக்கும் நிதி ஆயோக் அமைப்பு, இப்போது கல்வியிலும் கவனம் செலுத்தியுள்ளது. மத்திய அரசிடம் இந்த அமைப்பு பரிந்துரைத்துள்ள 'மூன்றாண்டு உடனடி செயல்திட்டம்', கல்வி தொடர்பாக சில பரிந்துரைகளைக் கொடுத்துள்ளது. இவற்றில் முக்கியமானது, 'மாணவர் சேர்க்கை குறைவாக இருக்கும் அரசுப் பள்ளிகளை தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும்; அல்லது அருகில் இருக்கும் அரசுப்பள்ளியோடு இணைக்க வேண்டும்' என்ற பரிந்துரை.

இதன் அடுத்த கட்டமாக, 'ஒரு பள்ளியில் 15 மாணவர்களுக்கும் குறைவானவர்கள் படிக்கிறார்கள் என்றால், அந்தப்பள்ளியை மூடிவிடலாம்' எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சுமார் 3,400 அரசுப் பள்ளிகளில் 15க்கும் குறைவான மாணவர்கள் படிக்கிறார்கள். இந்தப் பள்ளிகளுக்கே இப்போது ஆபத்து வந்துள்ளது.

மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை பள்ளிக்கல்வியை மேம்படுத்த அனைவருக்கும் கல்வி இயக்கம் (எஸ்.எஸ்.ஏ), அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம் (ஆர்.எம்.எஸ்.ஏ) ஆகிய இரண்டு அமைப்புகளை செயல்படுத்தி வந்தது. இவற்றின் சார்பில் மாநில அரசுகளின் பள்ளிகளுக்கு நிதியுதவியும், தொழில்நுட்ப உதவிகளும் அளிக்கப்படும். இப்போது இந்த இரண்டு அமைப்புகளையும் இணைத்து 'ஒருங்கிணைந்த அனைவருக்கும் கல்வித்திட்டம்' (சமக்ர சிக்ஷா அபியான்) என்ற புதிய அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். மாநில அரசுகளின் பள்ளிகளுக்கு இந்த அமைப்பின் சார்பிலேயே, 'ஒருங்கிணைந்த பள்ளி மானியம்' என்ற பெயரில் இனி ஆண்டுதோறும் நிதி வழங்கப்படும். '15 மாணவர்களுக்கு மேல் படிக்கும் பள்ளிகளுக்கு மட்டுமே இந்த நிதியை வழங்குவோம்' என்று இந்த அமைப்பு இப்போது தெரிவித்துவிட்டது. சமக்ர சிக்ஷா அமைப்பின் தமிழக திட்ட இயக்குநர், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களின் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் இதைத் தெரிவித்துள்ளார். பல பள்ளிகளில் விஜயதசமி வரை மாணவர் சேர்க்கை நடைபெறும். ஆகவே, அதன்பிறகு பள்ளிகளில் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை வைத்து இந்த விஷயத்தில் முடிவெடுக்கப்படும் என்று தெரிகிறது.


ஏன் இந்த அவலநிலை? இதற்கு என்ன தீர்வு?

● 2010–11ல் தமிழகத்தில் கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இதன்படி, தனியார் பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கு 25 சதவிகிதம் இடமளிக்க வேண்டும். அதற்கான கட்டணத்தை மத்திய மாநில அரசுகள் இணைந்து வழங்கும். ஒவ்வொரு ஆண்டும் 80 ஆயிரம் மாணவர்களுக்கு மேல் இந்த திட்டத்தில் தனியார் பள்ளியில் சேர்கிறார்கள். இவர்கள் அனைவரும் அரசுப்பள்ளிக்கு வரவேண்டிய மாணவர்கள். இவர்களுக்காக ஆண்டுக்கு 200 கோடி ரூபாய்க்கும் மேல் மத்திய, மாநில அரசுகள் தனியார் பள்ளிகளுக்குத் தருகின்றன. இந்தப் பணத்தை அரசுப்பள்ளிகளுக்குச் செலவிட்டு மேம்படுத்தியிருக்கலாம்.

● அரசுப் பள்ளிகளில் எல்.கே.ஜி, யு.கே.ஜி வகுப்புகளைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அதைச் செய்யாததால்தான் பலரும் தனியார் பள்ளிகளுக்குப் போனார்கள். அரசுப் பள்ளிகளில் ஆங்கிலவழி வகுப்புகள் நடத்தப்படும் என அறிவித்துவிட்டு, அதற்குத் தகுதியான ஆசிரியர்களை நியமிக்கவில்லை.

● அருகில் இருக்கிற கேரளாவில் அத்தனை அரசுப் பள்ளிகளிலும் ஸ்மார்ட் கிளாஸ் தொடங்கிவிட்டார்கள். வகுப்புக்கு ஓர் ஆசிரியரை நியமித்திருக்கிறார்கள். இதனால் இந்த ஆண்டு மட்டும் 3 லட்சம் மாணவர்கள் அங்கு அரசுப்பள்ளிகளில் புதிதாக இணைந்திருக்கிறார்கள். தமிழகத்தில் ஏராளமான ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. பல பள்ளிகளில் கழிப்பிட வசதிகள்கூட இல்லை. இப்போதுதான் 3,000 பள்ளிகளில் ஸ்மார்ட் கிளாஸ் தொடங்கப்போவதாகச் சொல்கிறார்கள். நவீனத் தேவைகளில் அரசுப்பள்ளிகள் பின்தங்க, அரசின் முடிவுகளே காரணமாகிவிட்டன.

எளிய குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒற்றை நம்பிக்கை, அரசுப் பள்ளிகளே! ஒரு கிலோ மீட்டருக்குள் ஒரு தொடக்கப்பள்ளி, மூன்று கிலோ மீட்டருக்குள் ஒரு நடுநிலைப்பள்ளி, ஐந்து கிலோ மீட்டருக்குள் ஒரு உயர்நிலைப்பள்ளி என்று பார்த்துப் பார்த்து உருவாக்கி வைக்கப்பட்ட கல்வி அமைப்பு நம்முடையது. இதில் மாற்றம் செய்யப்பட்டால், அடுத்த தலைமுறையில் ஏராளமானோருக்கு கல்வி மறுக்கப்படும் அபாயம் நிகழலாம். சமூகநீதியின் மண்ணான தமிழகத்தில் அந்த சமூக அநீதி நிகழக்கூடாது.



அதற்கு என்ன செய்ய வேண்டும்?

● தொடக்கப்பள்ளி முதல் மேல்நிலைப்பள்ளிகள் வரை காலியாக இருக்கும் ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தையும் உடனே நிரப்பவேண்டும். ஓராசிரியர் பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டும்.

● ஆசிரியர்களுக்கு கற்பித்தல் பணிகள் தவிர, வேறு பணிகளைத் தரக்கூடாது.

● பள்ளிகள்மீதான கண்காணிப்பு அமைப்புகள் தரம் உயர்த்தப்பட வேண்டும். சமூகத்துக்கும் பள்ளிக்குமான உறவை வலுப்படுத்த வேண்டும்.

● அரசு தொடக்கப்பள்ளிகளில் எல்.கே.ஜி, யு.கே.ஜி வகுப்புகள் தொடங்கப்படவேண்டும். ஆங்கிலவழிக் கல்விக்கான ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட வேண்டும்.

● ஸ்மார்ட் கிளாஸ் வசதி அனைத்துப் பள்ளிகளிலும் கிடைக்க வேண்டும்.

கல்வி என்பது ஒரு தலைமுறையின் வாழ்க்கையை மாற்றக்கூடியது. அதை வழங்கும் கடமையிலிருந்து அரசு விலகக்கூடாது. ●

# அதிகம் செலவு செய்தால் நல்ல கல்வி கிடைக்குமா?



கல்விக்கு அரசு அதிகம் செலவழித்தால், சிறந்த கல்வி எல்லோருக்கும் உறுதி செய்யப்படுமா? இதைப் புரிந்துகொள்ள குழந்தைகள் உரிமை அமைப்பான 'க்ரை', Centre for Budget and Governance Accountability (CBGA) ஆகிய இரண்டும் இணைந்து ஓர் ஆய்வு செய்தன. தமிழ்நாடு, பீகார், மகாராஷ்ட்ரா, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் சட்டீஸ்கர் ஆகிய ஆறு மாநிலங்களில் இந்த ஆய்வு நடந்தது.

இந்த ஆறு மாநிலங்களில் கல்விக்காக அதிகம் செலவழிக்கும் அரசு, தமிழக அரசுதான். அரசுப்பள்ளிகளில் படிக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் தமிழக அரசு ரூ. 23,460 செலவிடுகிறது. இது குழந்தைக்கு நேரடியாகப் போவது என்று கணக்கு இல்லை. ஆசிரியர்களுக்கான சம்பளம், பள்ளிகள் பராமரிப்பு, நிர்வாகச் செலவுகள் என எல்லாவற்றையும் சேர்த்து கணக்கிடப்படுவது.

இதற்கு அடுத்து இரண்டாவது இடத்தில் இருப்பது, மகாராஷ்ட்ரா. அந்த மாநிலம் ஒரு மாணவனுக்கு 21,100 ரூபாய் செலவிடுகிறது. இந்தியாவிலேயே அதிக சம்பளம் பெறுவது மகாராஷ்ட்ரா அரசுப் பள்ளி ஆசிரியர்கள்தான். இந்தியாவின் மிகப் பணக்கார மாநிலமாகக் கருதப்படும் மகாராஷ்ட்ரா, இவ்வளவு செலவிடுவதில் ஆச்சர்யமில்லை. அந்த மாநிலத்தின் வருவாயாக வரும் ஒவ்வொரு ரூபாயிலும் 25 பைசா கல்விக்காக செலவிடப்படுகிறது.

தமிழகம் போலவே மகாராஷ்ட்ராவிலும் எட்டாம் வகுப்பு வரை மாணவர்களை ஃபெயில் ஆக்கும் வழக்கம் நடைமுறையில் இல்லை. அதனால் கல்வியின் தரத்தைவிட, குழந்தைகளை விடுபடாமல் பள்ளியில் சேர்ப்பதில்தான் கவனம் செலுத்துகிறார்கள். இந்த நிலையை மாற்றி, கல்வித்தரத்தையும் உயர்த்த வேண்டும் என அந்த மாநில அரசு தீர்மானித்துள்ளது. அப்போதுதானே எல்லோருக்கும் நல்ல கல்வி தர முடியும்!

அரசு இவ்வளவு செலவிடுவதால், எளிய மக்களுக்கும் இலவசக் கல்வி கிடைக்கிறது. ''அரசுப்பள்ளி ஆசிரியர்கள் மோசமில்லை. ஆனாலும், தனியாக டியூஷன் படிக்காமல் பாடங்களைப் புரிந்துகொள்வது கடினமாக இருக்கிறது'' என்பதே இந்த ஆய்வில் பங்கேற்ற நிறைய பெற்றோர்களின் கருத்தாக இருக்கிறது.

இத்தனைக்கும் தமிழ்நாடு போலவே மகாராஷ்ட்ராவிலும் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் என யாருமே இல்லை. ஆனாலும், துவக்கப்பள்ளிகளைத் தாண்டி குழந்தைகள் ஆறாம் வகுப்புக்குப் போகும்போது, ஒவ்வொரு பாடத்தையும் அந்தப் பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்கள் எடுப்பது இல்லை என்ற பிரச்னை எல்லா மாநிலங்களிலும் உள்ளது. மகாராஷ்ட்ராவில் வெறும் 25 சதவிகித பள்ளிகளில்தான் ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்தனி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆங்கிலம், கணிதம், அறிவியல் பாடங்களை சொல்லித் தரும் ஆசிரியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை உள்ளது.

ஆரம்பப் பள்ளிகளில் வேறுமாதிரி பிரச்னை உள்ளது. ஒரே ஆசிரியரே பல வகுப்புகளுக்குப் பாடம் எடுக்கும் நிலைதான் அது. மகாராஷ்ட்ராவில் சுமார் 12 ஆயிரம் ஆரம்பப் பள்ளிகள் ஒரே ஆசிரியரை மட்டுமே கொண்டுள்ளன. ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை எல்லா வகுப்புக் குழந்தைகளுக்கும் ஒருவரே பாடம் எடுக்கிறார்.

அதிகம் செலவு செய்வது மட்டுமே நல்ல கல்விக்கு உத்தரவாதம் தருவதில்லை. இந்த நிலை மாற வேண்டும். •



MHRD, Govt. of India, has ranked

# VIT as the best private engineering institution

in the country.

## மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வி.ஐ.டியை நாட்டின் தலை சிறந்த தனியார் பொறியியல் கல்வி நிறுவனமாக தேர்ந்தெடுத்துள்ளது.

In a ranking done for the first time ever by the NIRF (National Institutional Ranking Framework) of MHRD, VIT has been ranked 13th overall and 1st among private institutions under 'Engineering institutions' category.

VIT has also been ranked 17th overall and 7th among private institutions under 'Management institutions' category.

## LEADING IN RESEARCH

### in number of publications

**By publishing 2233 research articles in Scopus indexed journals in 2015, VIT has surpassed all the other institutions in India**

[Source: Scopus database as on 6.4.2016]

***We thank all our faculty, staff, students, alumni and well-wishers !!***

VIT® UNIVERSITY
(Estd. u/s 3 of UGC Act 1956)

VELLORE ▪ CHENNAI

www.vit.ac.in

VIT - A place to learn; A chance to grow




மாதா, பிதா, குரு, தெய்வம் என மரியாதைக்குரியவர்கள் வரிசையில் ஆசிரியர்களை மூன்றாவது இடத்தில் வைப்பது நம் நாட்டு வழக்கு. ஆனால், மாதா, பிதாவைவிட ஆசிரியரை உயர்ந்தவராகக் கொண்டாடுவது வியட்நாம் பண்பாட்டில் இருந்திருக்கிறது. அரசனுக்கு அடுத்தபடியாக வியட்நாமில் ஆசிரியரைப் பார்க்கும் வழக்கம் இருந்திருக்கிறது. அந்தக் காலத்திலேயே பணக்காரர்கள், ஆசிரியர்களுக்கு சகல வசதிகளையும் செய்துகொடுத்து, அவர்களை வீட்டுக்கு வரவழைத்து, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கச் சொல்வார்களாம். அந்த அளவுக்கு ஆசிரியர்களை மதிக்கும் பண்பாடு வியட்நாமில் இருந்திருக்கிறது.

ஆசிரியர்களை மதிக்கும் அதே அளவுக்குத் தாய்மொழியையும் மதிப்பதால்தான் வியட்நாம் முன்னேறியுள்ளது. கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்களாக வியட்நாம் மக்கள் வரி வடிவத்துக்கு சீன மொழியின் எழுத்துகளையே உபயோகித்திருக்கிறார்கள். ஆனால், ஒலி வடிவத்தில் அது வியட்நாம் மொழியாகவே இருந்தது. பின்னர் வியட்நாம் மொழி அறிஞர்கள் சேர்ந்து ஆலோசித்து, சீன வரி வடிவத்தை விட்டு விலகி, லத்தீன் மொழியின் வரி வடிவத்தை சிறிது மாற்றம் செய்து தங்களுக்கானதாக எடுத்துக்கொண்டார்கள். இப்படி வரியும் ஒலியும் ஒன்று சேர்ந்ததே மிகத் தாமதமாகத்தான் என்றாலும், அதன்பின் அசுரப் பாய்ச்சலில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். வியட்நாம் மொழிவழிக் கல்வியை நாடெங்கும் பரப்பி, 'தாய்மொழியில் கல்வி' என்பதை வைத்தே அந்நாடு நன்கு முன்னேறியுள்ளது.

யுனெஸ்கோ முன்னெடுத்த 'அனைவருக்கும் கல்வி' என்ற குறிக்கோளை 2015ம் ஆண்டே வியட்நாம் எட்டி விட்டது. அங்கு குழந்தைகளை நான்கு வயதில் எல்.கே.ஜி சேர்க்கிறார்கள். அதன்பின் இந்தியாவில் இருப்பது போன்றுதான் 12ம் வகுப்பு வரை படிக்கிறார்கள். வயது அடிப்படையில் வியட்நாம் மாணவன், இந்திய மாணவனைவிட ஒரு வயது பின்னால் ஒவ்வொரு வகுப்பையும் படித்து வருவான். 18 வயதில் 12ம் வகுப்பு முடிப்பான். மிகச் சிறிய வயதிலேயே கிண்டர் கார்டன் வகுப்பில் சேர்ப்பது குழந்தைகள் மனதை பாதிக்கலாம் என்பது அவர்கள் கோட்பாடு.

1945ம் ஆண்டுக்குமுன்பு பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்தது வியட்நாம். அப்போது மக்களுக்கு சரியான கல்வி கிடைக்கவில்லை. மூன்று பல்கலைக்கழகங்கள் மட்டுமே இருந்தன. அப்போது ஆரம்பக் கல்வி படித்தவர்கள், வெறும் 2 சதவிகிதம் பேர்தான். மேல்நிலைக் கல்வி முடித்தவர்கள் வெறும் 0.4 சதவிகிதம் மட்டுமே. பல்கலைக்கழகம் சென்று உயர்கல்வி பெற்றவர்கள், 0.1 சதவிகிதம் பேர். இவர்கள் அனைவர்மீதும் பிரெஞ்சு மொழியே திணிக்கப்பட்டது. தங்களுக்காகப் பணிபுரிபவர்கள் மட்டும் படித்தால் போதும் என்ற எண்ணம், வியட்நாமை அடிமைப்படுத்தி ஆண்ட பிரெஞ்சு அரசுக்கு இருந்தது. அதனால், சுமார் 98 சதவிகித வியட்நாம் மக்கள் எழுதப் படிக்கத் தெரியாமலேயே வாழ்ந்தார்கள்.

வியட்நாமுக்கு சுதந்திரம் வாங்கித் தந்த தலைவர் ஹோசிமின், 'சுதந்திர வியட்நாம் வறுமை, நாட்டின் மீதான போர்த் தாக்குதல் மற்றும் கல்வியறிவின்மை ஆகிய மூன்றையும் தீவிரமாக எதிர்க்க வேண்டும்' என்றார். கல்வியறிவு இல்லாததை நாட்டின் மிக முக்கியமான மூன்று பிரச்னைகளில் ஒன்றாக அவர் பார்த்தார். அதனால் ஹோசிமின் மூன்று உத்தரவுகளை மக்களுக்குப் பிறப்பித்தார்.

- அனைவரும் கட்டாயம் கல்வி கற்க வேண்டும்.
- விவசாயிகளும் உழைப்பாளிகளும் படிக்க வசதியாக இரவுநேரப் பள்ளிகள் இயங்கும்.
- மக்கள் அனைவரும் வியட்நாமீஸ் எனப்படும்



# தாய்மொழிக் கல்வியே தரமானது!



தாய்மொழியைக் கட்டாயம் படித்திருக்க வேண்டும்.

ஹோசிமின் இதை அறிவித்து அடுத்த நிமிடத்திலிருந்து அரசு இயந்திரமும் மக்களும் கூட்டாக கல்வியறிவுக்காக உழைத்தார்கள். அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் 75 ஆயிரம் பள்ளிகள் உருவாக்கப்பட்டு, ஒரு லட்சம் ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். 25 லட்சம் மக்கள் கல்வியறிவு பெற்றார்கள். அப்போதைய மக்கள்தொகையான 2 கோடி பேரில், 25 லட்சம் பேர் இரண்டே ஆண்டுகளில் கல்வியறிவு பெறுவது என்பது மகத்தான சாதனை. வியட்நாம் மக்கள் அன்று அதை சாதித்ததில் தொடங்கி, இப்போதுவரை கல்வியில் சிறந்து விளங்குகின்றனர்.

இப்படி முன்னேறிச் செல்லும்போது அடுத்த சோதனை வந்தது. 1965ம் ஆண்டு தொடங்கி அடுத்த ஏழு ஆண்டுகள் அமெரிக்கப் படைகளின் கொடூரமான தாக்குதலால் வியட்நாம் சின்னாபின்னம் ஆனது. பலர் பள்ளிக்கல்வியை பாதியில் விடவேண்டிய நிலை. ஆனாலும், போர் முடிந்தபிறகு மறுபடியும் வியட்நாம் அரசு அதைச் சரி செய்தது. 1982ம் ஆண்டு கல்வியின் நவீன முறைகளைச் சேர்த்து இன்னும் மேம்படுத்தினர்.

உற்பத்தி சார்ந்த கல்வி, அறிவியல் – தொழில்நுட்பம் மற்றும் கலாசார அறிவு இம்மூன்றையும் முக்கிய குறிக்கோள்களாகக் கொண்ட கல்வித்திட்டம் அவர்களுடையது. செயல்முறைக் கல்வி, சமூகத்தில் சென்று தெரிந்துகொள்வது போன்ற திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. தனிப்பட்ட துறைகளை மேம்படுத்தும் விதமாக, ஒவ்வொன்றுக்கும் பிரத்யேக பல்கலைக்கழகங்கள் உள்ளன. கணிதம், அறிவியல், சமூக அறிவியல் போன்ற முக்கியமான பாடங்களை தாய்மொழியிலேயே கற்றுக் கொடுக்கின்றனர்.

வியட்நாமின் தற்போதைய கல்விப் பிரச்னை என்பது பொருளாதாரரீதியானது மட்டுமே. கொள்கை அளவில் அவர்கள் தெளிவான கல்விமுறையை முன்பே கட்டமைத்து விட்டனர். உலகமயமாக்கலுக்குப் பிறகு ஆங்கிலத்தையும் பள்ளிகளில் கற்பிக்கின்றனர். தேவையான சமயத்தில் தேவையான மாற்றங்களை அனுமதிக்கும் அதே சமயத்தில், சமத்துவத்துக்குக் கேடு வராமல் பார்த்துக்கொள்கின்றனர். தங்களுடைய பண்பாட்டைப் பாதுகாக்கும் அறிவைக் கொடுக்கும் கல்வித்திட்டத்தையும் பின்பற்றுகின்றனர்.

Programme for International Student Assessment (PISA) வருடா வருடம் வெளியிடும் மாணவர்கள் அறிவுத்திறன் பற்றிய பட்டியலில் வியட்நாம் 25 ரேங்குக்குள் எப்போதும் வந்து விடும். அறிவியலில் 2015ம் ஆண்டு எட்டாவது ரேங்கை வியட்நாம் பிடித்திருப்பது சாதாரண விஷயமல்ல.

வசதி இல்லாத வறுமை தேசம், தாய்மொழிக்கு வரி வடிவமே இல்லாமல் இருந்தது, பிரெஞ்சு ஆட்சிக் காலத்தில் பள்ளிகள் இல்லை, பிரெஞ்சு மொழி திணிக்கப்பட்டிருந்தது... இந்த எல்லா தடைகளையும் தாண்டி, தாய்மொழியில் கல்வி என்பதை சாதித்துக் காட்டினர் அவர்கள். போரும், பொருளாதாரப் பிரச்னைகளும் அவர்களின் கல்வி தாகத்தை எந்த விதத்திலும் தடுக்கவில்லை.

பணக்கார நாடுகளில் கல்விக்குச் செலவிட நிறைய பணம் இருக்கும். அதை வைத்து பல்வேறு திட்டங்கள் தீட்டி சாதிப்பார்கள். வியட்நாம் போன்ற வளரும் நாடுகள் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொண்டு, அதற்குத் தேவையான உழைப்பையும் மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, தாய்மொழியில் கல்வியைக் கொடுத்து, உலகின் முன்னணி நாடுகளுடன் போட்டியிட்டு கல்வியறிவில் ஜெயிப்பது பெரிய விஷயம். இந்தியா போன்ற வளரும் நாடுகள், வியட்நாமிடமிருந்து கற்றுக்கொள்ள நிறைய உண்டு. ●



# கொசுக்களுக்கு சொல்லுங்கள் குட் பை!



மழைக்காலங்களில் பருவநிலை இதமாக மாறும்; தண்ணீர்ப் பிரச்னை தீரும்; பூமி செழிக்கும்; விவசாயம் வளம் பெறுவதால் தேசமே முன்னேறும். ஆனால், கொசுக்கள் பெருகுவதும், அவற்றால் நோய்கள் பரவுவதும் மழைக்காலத்தின் மறுபக்கம். கொசுக்கள்தான் மோசமான நோயான மலேரியாவைப் பரப்புகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் மலேரியாவால் சுமார் 30 ஆயிரம் பேர் பரிதாபமாக உயிரிழக்கின்றனர். இப்படி கொசுக்களால் ஏற்படும் இழப்புகள் ஏராளம். கொசுக்களை முழுவதுமாக ஒழிக்க முடியாது. அவை நம் வீட்டைச் சுற்றி உருவாவதைத் தடுப்பதும், அவற்றின் கடியிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்வதுமே தீர்வு.

இரண்டு வகைக் கொசுக்களே பெரும்பாலான நோய்களைப் பரப்புகின்றன. ஏடிஸ் வகை கொசுக்கள்தான் டெங்கு, சிக்குன் குன்யா போன்ற நோய்களைப் பரப்புகின்றன. அனோபிலஸ் கொசுக்கள் மலேரியாவைப் பரப்புகின்றன.

பெண் கொசுக்களே மனிதர்களைக் கடிக்கின்றன. கொசுக்களுக்கு பறக்கும் சக்தியைப் பெறுவதற்கு சர்க்கரைச் சத்து தேவை. பூக்கும் தாவரங்களிலிருந்து இதைப் பெற்றுக்கொள்கின்றன. முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்வதற்கு மனிதர்களின் ரத்தம் தேவை. இதற்காகவே அவை நம்மைக் கடிக்கின்றன.

கொசுக்கள் பிறந்தது முதலே மனிதர்களைக் கடிக்க ஆரம்பிக்கின்றன. ஆறு அடி தூரத்தில் இருப்பவற்றை கொசுக்களால் துல்லியமாகப் பார்க்க முடியும். வளர்ந்த கொசுக்களில் 20 சதவிகிதம் ஒவ்வொரு நாளும் இறந்துவிடுகின்றன. 15 நாட்களைத் தாண்டி உயிர் வாழ்பவை வெறும் நான்கு சதவிகித கொசுக்களே! இவைதான் நோய்க்கிருமிகளைப் பரப்பும் ஆபத்தான கொசுக்கள்.

கொசுக்கள் கடிப்பதிலிருந்து தற்காத்துக் கொள்வதைவிட, அவற்றின் பெருக்கத்தைத் தடுப்பதுதான் எளிமையான தீர்வு. இதற்கு வீட்டுக்கு உள்ளேயும் வெளியிலும் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

பாத்திரங்களில் தண்ணீர் பிடித்து வைத்தால், அவற்றை கொசுக்கள் நுழைய முடியாதபடி மூடி வைக்க வேண்டும். அசுத்த நீரில் இனப்பெருக்கம் செய்யும் கொசுக்களைப் போலவே நன்னீரில் பெருகும் கொசுக்களும் உண்டு.

பாத்ரூம், பால்கனி என எங்கும் தண்ணீர் நீண்ட நாட்கள் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.





பழைய டயர், உடைந்த பாத்திரங்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவற்றில் மழைநீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குப்பைகளில் போட்டுவைக்கும் பொருட்களில்தான் தண்ணீர் தேங்கி, கொசுக்கள் பெருகுகின்றன. மொட்டை மாடியில் இலைகள், குப்பைகள் போன்றவை குழாயில் அடைத்துக்கொண்டு தண்ணீர் தேங்குவதைத் தடுக்க வேண்டும். தோட்டத்தில் செடிகள் வளர்ப்பது நல்லதே. ஆனால், தொட்டிகள் மற்றும் செடிகளின் வேர்ப்பகுதியில் தண்ணீர் எப்போதும் தேங்கியிருக்கக் கூடாது. கழிவுநீர்க் குழாய்களில் எங்காவது ஓட்டை இருந்தால் அடைக்க வேண்டும்.

அக்கம்பக்க வீடுகளில் தண்ணீர் தேங்கியிருந்தால், அவர்களுக்கும் ஆபத்து; உங்களுக்கும் ஆபத்து. அவர்களிடம் சொல்லி சுத்தம் செய்ய வையுங்கள்.

வீட்டுக்கு வெளியிலும் தண்ணீர் தேங்குவதைத் தடுக்க வேண்டும். மழைநீர் மற்றும் கழிவுநீர்க் கால்வாய்களில் அடைப்புகள் இருந்தால், குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த அனைவரும் இணைந்து முயற்சி எடுத்து சுத்தம் செய்யலாம். அல்லது உள்ளாட்சி அமைப்புகளிடம் புகார் செய்து இதை சரிப்படுத்தலாம்.

சூரியன் மறையும் மாலை நேரத்திலும், அதிகாலை நேரத்திலுமே கொசுக்கள் அதிகம் கடிக்கின்றன. அதனால் அந்த நேரங்களில் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடிவைக்க வேண்டும். வெளியில் விளையாடும் குழந்தைகளை அந்த நேரத்தில் வீட்டுக்குள் இருக்கச் சொல்ல வேண்டும். ஏடிஸ் ரக கொசுக்கள் பகல் நேரத்திலும், அனோபிலஸ் கொசுக்கள் இரவு நேரத்திலும் கடிக்கின்றன. எனவே எப்போதும் வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்வது அவசியம்.

முழுக்கை சட்டை, கால்கள் வரை மறைக்கும் ஆடைகள் ஆகியவற்றை அணிந்துகொள்வது பாதுகாப்பு. மென்மையான காட்டன் துணிகளே கொசுக்களிடமிருந்து பாதுகாப்பு அளிக்கின்றன. அடர்நிற ஆடைகளை அணிபவர்களை கொசுக்கள் எளிதில் அடையாளம் கண்டு கடிக்கின்றன.

நாம் மூச்சுக்காற்று வழியே வெளியேற்றும் கார்பன் டை ஆக்ஸைடுதான், கொசுக்களை நம்மை நோக்கி ஈர்க்கும் அடையாளம். குண்டாக இருப்பவர்கள் அதிகம் கார்பன் டை ஆக்ஸைடை வெளியேற்றுகிறார்கள். அதனால் அவர்களை கொசுக்கள் அதிகம் கடிக்கின்றன. நம் முகத்தையும் தலையையுமே கொசுக்கள் சுற்றுவதற்குக் காரணம், நாம் விடும் மூச்சுக்காற்றுதான்.

குளித்து சுத்தமாக இருப்பவர்களின் சருமத்தில் பாக்டீரியாக்கள் குறைவாக இருக்கும். அவர்களைக் கொசுக்கள் கடிப்பதில்லை. அழுக்காக இருப்பவர் களைக் குறிவைத்துக் கடிக்கின்றன.


குடிபோதையில் இருப்பவர்களையும் கொசுக்கள் அதிகம் கடிக்கும். குடிப்பவர்களின் உடலில் செல்லும் ஆல்கஹால், லாக்டிக் அமிலமாக சிதைகிறது. இதன் வாசம் கொசுக்களை ஈர்க்கிறது.



கொசுக்களை விரட்டவும் அழிக்கவும் கொசுவர்த்தி, மேட் போன்றவைதான் பயன்படுத்தப்படுகின்றன. 2006-ம் ஆண்டு எடுத்த ஆய்வின்படி இந்தியாவில் கொசுவிரட்டிகள் அந்த ஆண்டில் மட்டும் 4,400 கோடி ரூபாய்க்கு விற்றிருக்கின்றன. இவற்றில் கொசுவர்த்தி விற்பனையே அதிகம். அவையே நீண்ட நேரத்துக்கு கொசுக்களிடமிருந்து பாதுகாப்பு தருகின்றன.

பெரும்பாலான கொசுவிரட்டிகள் DEET எனப்படும் டை ஈதைல் டொலுமைட் என்ற வேதிப்பொருளால் உருவாக்கப்பட்டவை. இவை அதிகம் ஆபத்தில்லாதவை என்றே பல காலம் கருதப்பட்டன. ஆனால், 'நீண்ட காலத்துக்கு இவற்றைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவது சுவாசப் பிரச்னைகளை ஏற்படுத்துகின்றது' என இப்போது கண்டறிந்துள்ளார்கள். சிலர் உடலில் பூசிக்கொள்ளும் கொசுவிரட்டிகளைப் பயன்படுத்துகிறார்கள். நம் உடலில் மிகப்பெரிய உறுப்பு சருமம்தான். சருமத்தில் பூசிக்கொள்ளும் இந்த மருந்துகள், உடலுக்குள் ஊடுருவிச் செல்கின்றன. இவை கொழுப்பில் கரையும் வேதிப்பொருட்கள் என்பதால், கொழுப்பு திசுக்களில் எளிதில் சென்று சேர்ந்துவிடுகின்றன. இப்படி இவை அதிகம் உடலில் சேர்வதும் ஆபத்தே! இப்போது DEET வேதிப்பொருள் சேர்க்கப்படாத கொசுவிரட்டிகள் வந்துள்ளன. அவற்றைப் பயன்படுத்தலாம்.

எல்லாவற்றையும்விட எளிமையான பாதுகாப்புக் கவசம், கொசுவலையே! ரொம்ப பழமையான விஷயமாகத் தெரியலாம். ஆனால், இதைவிட ஆபத்தில்லாத வழி ஏதுமில்லை. மின்விசிறியின் காற்றைத் தடுக்காமல் அப்படியே உள்ளே அனுப்பும் மெல்லிய கொசுவலைகள் இப்போது வந்துவிட்டன. படுக்கையில் அவற்றைப் பயன்படுத்தலாம். ஜன்னல், வென்டிலேட்டர், பால்கனி போன்ற இடங்களில் கொசுவலைகளை நிரந்தரமாகப் பயன்படுத்தலாம். ஒருமுறைதான் செலவு; நிரந்தரத் தீர்வு. ●



# சரளமாகச் சொல்லலாம் வாய்ப்பாடு!




■ விஜயபாஸ்கர் விஜய்

“என் மகள் ஆறாம் வகுப்பு வந்து விட்டாள். ஆனால் அவளுக்கு கணித வாய்ப்பாடு 12 வரைக்கும்தான் தெரியும். அதற்குப் பிறகு 20ம் வாய்ப்பாடு வரை கூட்டிக் கூட்டிதான் சொல்வாள். தங்கு தடையின்றி தண்ணி தரோவாக அவளை எப்படிப் படிக்க வைப்பது?''

பல பெற்றோர்களின் கேள்வி இதுதான். அவர்கள் பிள்ளைகள் சரளமாக, அதாவது தண்ணி தரோவாக வாய்ப்பாடு படிக்க வேண்டும் என்ற ஆர்வம் பெற்றோர்களுக்கு இருக்கிறது.

இந்த ‘தண்ணி தரோவ்’ என்பதை ஆங்கிலத்தில் Fact Fluency என்பார்கள். கணிதத்தில் தண்ணி தரோவாக இருக்க வேண்டும் என்று சொல்ல, முன்னால் ஒரு மேத்ஸ் போட்டுக்கொள்ளுங்கள். Maths Fact Fluency!




மளிகைக்கடைக்காரர்கள் வேகமாகக் கூட்டுவதை கவனித்திருப்போம். இப்போது கணினி பில் போடும் முறை வந்துவிட்டாலும்கூட, நீண்ட பில் எழுதி கையாலே கூட்டும் பலர் இருக்கிறார்கள்தான். ஒருமுறைதான் கூட்டுவார்கள். மிகச்சரியாக இருக்கும். எப்படி இந்த சிறுவியாபாரிகள் இந்த Maths Fact Fluency–யை அடைகிறார்கள்.

ஒன்றை தப்பாக விட்டால்கூட காசு போய்விடுமே என்ற கவனத்தில் கூட்டுவார்கள். அதற்காக அதிக கவனம் எடுத்து, ஒரு வாடிக்கையாளருக்கு அரை மணி நேரம் எடுத்துக்கொண்டு கூட்டினால் மற்ற வாடிக்கையாளர்கள் போய்விடுவார்கள். இந்த நிர்ப்பந்தம்தான் அவர்களை சரியாகவும் வேகமாகவும் கூட்டும் யுக்தியைப் பழகச் செய்கிறது.

ஒரு குழந்தைக்கு எப்படி Maths Fact Fluency–யில் கூட்டல் சொல்லிக் கொடுப்பது?

0, 5, 10 இந்த மூன்றும் பென்ச்மார்க் எண்கள். பென்ச்மார்க் என்றால் மைல்கல், ஓர் அடையாளம் என்று நினைத்துக்கொள்ளுங்கள். எந்த எண்ணைச் சொன்னாலும், அவற்றுக்கு அருகே உள்ள இந்த பென்ச்மார்க் எண்களில் ஒன்றுக்கும் உள்ள தொடர்பு நம் கண் முன்னால் விரிய வேண்டும். இந்த விரிதல் எவ்வளவு வேகமாக நடக்கிறதோ, அவ்வளவு வேகமாக உங்களால் கூட்ட முடியும்.

கூட்டும் எண்களைப் பார்த்தல், பென்ச்மார்க் எண்களோடு உள்ள தொடர்பு விரிதல், அதை வைத்துக் கூட்டல்...

8+9 = 17

இதில் எட்டுக்கு நெருக்கமாக உள்ள பென்ச்மார்க் எண் 10. இந்த இரண்டு எண்களுக்கும் என்ன தொடர்பு?

10–8 = 2

அப்படியானால் 8 என்ற எண்ணுடன் கூட்டப்படும் 9 என்ற எண்ணை 2+7 ஆகப் பிரித்து, அந்த 2 பச்சக்கென்று 8 என்ற எண்ணோடு சேர்ந்து பத்தாகி, மீதம் இருக்கும் 7 பத்தோடு கூட்டப்பட்டு 17 ஆகிவிடும்.

இதை வேறுவிதமாகவும் செய்யலாம். கூட்டப்படும் எண்ணான 9க்கும் பென்ச்மார்க் எண்ணான 10க்கும் உள்ள தொடர்பு என்ன?

10–1 = 9 அப்படியானால் 8+10–1 என்று எழுதலாமா? எழுதலாம். 8+10 கூட்ட எளிது. அதிலிருந்து ஒன்றைக் கழிக்கலாம்.

ஆக, எந்த எண்ணுக்கும் இந்த பென்ச்மார்க் எண்ணுக்கும் உள்ள தொடர்பு சட்டென்று வருவதாகக் குழந்தைகளுக்குப் புரியவைக்க வேண்டும்.

கூட்டல் வாய்ப்பாடு என்ற ADDITION TABLES எடுக்கும்போது இதைச் சொல்லியே குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுங்கள்.

13–க்கு பென்ச்மார்க் 10+3

7–க்கு பென்ச்மார்க் 10–3, 5+2

3–க்கு பென்ச்மார்க் 0+3, 5–2

இந்தப் புரிதலை குழந்தைகளுக்கு ஏற்படுத்துங்கள். இதை ஏற்படுத்துவது எளிது. இதை ஏற்படுத்தினாலே முக்கால்வாசி வேலை முடிந்துவிட்டது.

சரி, வாய்ப்பாடை எப்படி குழந்தைகளை தரோவாகவும் வேகமாகவும் சொல்ல வைப்பது?

17–ம் வாய்ப்பாடை எடுத்துக் கொள்வோம்.

அதில் 17x1, 17x10 ஆகியவற்றைப் படிக்க வேண்டியதில்லை. இந்த இரண்டும் என்ன என்பது குழந்தைக்கே தெரியும். இடையில் வரும் எட்டு பெருக்கல்கள் மட்டும்தான் பிரச்னை.

17x2, 17x3, 17x4, 17x5, 17x6, 17x7, 17x8, 17x9 ஆகிய இந்த எட்டையும்தான் படிக்க வேண்டும். அப்படித்தானே!

இந்த எட்டையும் நன்றாக இடம்விட்டு ஒரு பேப்பரில் எழுதிக்கொள்ளுங்கள். இவற்றில் முதல் நான்கை விட்டு, மீதம் நான்கை மடித்து விடுங்கள்.

17x2, 17x3, 17x4, 17x5 ஆகிய நான்கும்தான் முதல் செட்.

17x2 = 34
17x3 = 51
17x4 = 68
17x5 = 85

இவற்றில் 17x2 = 34 என்பது 17x1 = 17 என்பதில் இன்னொரு 17ஐக் கூட்டுவதன் மூலம் வருகிறது என்று சொல்லுங்கள்.

17+17 = 17+(20–3) = 37–3 = 34 என்று இதைக் கூட்டலாம்.

அல்லது 17+17= 17+10+7 = 27+7 = 34 என்றும் கூட்டலாம்.

இப்படியே 34, 51, 68, 85 ஆகியவை எப்படி வருகின்றன என்பதையும் பென்ச்மார்க் எண்களின் மூலம் கூட்டியோ, கழித்தோ விளக்குங்கள்.

குழந்தையை பேப்பரும் பேனாவும் கொடுத்து கூட்டச் சொல்லுங்கள். இப்போது Fluency modeக்கு போங்கள். மனப்பாடம் செய்யச் சொல்லுங்கள். வலது பக்கம் இருக்கும் விடையைப் பொத்திக்கொண்டு, பார்க்காமல் சொல்லச் சொல்லுங்கள். உங்களிடம் சொல்லச் சொல்லுங்கள்.

குழந்தைகளை ஆசிரியராக்கி, நீங்கள் பதில் சொல்வதாக நினைத்து திணறுங்கள். அப்போது குழந்தைகள் அதைத் திருத்தி, தாங்கள் எளிமையாகச் சொல்வதாக நினைத்து சொல்லித்தருவார்கள்.

''எனக்கு இந்த பதினேழு இன்ட்டு நாலுதான் மறக்குது'' என்று சொல்லுங்கள். ''இது என்னம்மா... ரொம்ப ஈஸிதானே... 68'' என்பார்கள்.

அப்படியே குழந்தைகளை வேகமாகச் சொல்லச் சொல்லுங்கள், மிக வேகமாக. எனவே, இப்போ பதினேழாம் வாய்ப்பாட்டில் பாதி முடிந்தது. சில மணி நேர இடைவெளிக்குப் பிறகு மீதம் நான்கையும் இதே பாணியில் சொல்லுங்கள்.


அன்றிரவு தூங்கும்போது இருவரும் சேர்ந்து பதினேழாம் வாய்ப்பாடை தங்கு தடையில்லாமல் சொல்லும் முறைக்கு வந்துவிடலாம்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு இதே பதினேழாம் டேபிள்ஸை சொல்லச் சொல்லிக் கேட்கும்போது, குழந்தை முதலில் மறந்தாலும், மறுபடி ஒரு நிமிடத்தில் பிடித்து விடும். இந்த Quick revisionஐ அவ்வப்போது கொடுத்துக்கொண்டிருங்கள்.

'நம் குழந்தைக்கு இந்த சத்து உடம்பில் ஒட்டிக்கொள்ள வேண்டும்' என்று எப்படி பார்த்துப் பார்த்து சாப்பாடு ஊட்டி வளர்க்கிறீர்கள். அதே கணக்குதான் டேபிள்ஸ் படிப்பதிலும். உங்கள் உடல், பொருள், ஆவியெல்லாம் அன்றைய நாள் அந்த வாய்ப்பாடை குழந்தை வேகமாகச் சொல்லவேண்டும் என்பதில்தான் இருக்க வேண்டும். ஆனால், அந்த ஆவேசத்தை குழந்தைமீது வெளிப்படுத்திவிடக் கூடாது.

பக்குவமாக சுற்றிச்சுற்றி வந்து டேபிள்ஸை ருசியாக ஊட்டி, தண்ணீர் குடிக்க வைத்து, ஏப்பமும் வர வைத்துவிட வேண்டும்.

கணித ஆசிரியர் பள்ளியில் ஒரு குழந்தைக்கு 40 சதவிகிதம்தான் உதவி செய்ய முடியும். மீதம் 60 சதவிகிதம் கணிதக் கல்வியை, இந்த Maths Fact Fluency என்பதை பெற்றோர்களே செய்ய முடியும் என் பதை மனதில் எப்போதும் நிறுத்திக்கொள்ளுங்கள். ●



# ஆச்சர்ய உலகம்



ரோஜா குடும்பத்தைச் சேர்ந்த தாவரத்தில்தான் பாதாம் பருப்பு விளைகிறது.



மரங்களில் வயதானதும் வளையங்கள் ஏற்படுவது போல, தவளைகளின் எலும்புகளிலும் வளையங்கள் உருவாகின்றன.



மெக்சிகோ நகரம் கடந்த 100 ஆண்டுகளில் 26 அடி அளவுக்கு பூமிக்குள் புதைந் திருக்கிறது.




பூனைகள் தூங்குவதில் ஆர்வமுள்ளவை. 15 வயதில் இருக்கும் ஒரு பூனை, தன் ஆயுளில் 10 ஆண்டுகளை தூங்கியே கழித்திருக்கும்.



ஒரு லிட்டர் மினரல் வாட்டரை தயாரிக்க மூன்று லிட்டர் தண்ணீர் செலவாகிறது.



நாம் எல்லா சட்டங்களையும் ஆங்கிலத்தில் எழுதுகிறோம். ஆனால், இங்கிலாந்து சட்டங்கள் சுமார் 400 ஆண்டு காலம் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டிருந்தன.



நிலவில் நிலவும் வெப்ப நிலை, கொதிக்கும் தண்ணீரின் வெப்பநிலையைவிட அதிகம்.



ஜப்பான் நாட்டில் இருக்கும் குழந்தைகளைவிட செல்லப்பிராணிகளின் எண்ணிக்கை அதிகம்.



1883ம் ஆண்டு நிகழ்ந்த ஓர் எரிமலைச் சீற்றத்தின் காரணமாக சூரியன் பச்சை நிறத்தில் தெரிந்தது.




பன்றிகள் சேற்றில்தான் வாழும். ஆனால், சிலவகை பன்றிகள் சேற்றைக் கண்டு பயப்படும்.



மரங்களில் வசிக்கும் சில வகை பாம்புகள் ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்துக்குத் தாவும்போது, சமயங்களில் 78 அடி தூரம்கூட காற்றில் தாண்டுகின்றன. இது இரண்டு பஸ்களின் நீளத்தைவிட அதிகம்.



சனி கிரகம் முழுக்க வாயுக்களால் நிரம்பியது. ஒரு பெரிய கடலில் அதைத் தூக்கிப் போட்டால், அந்த கிரகம் மிதக்கும்.




கடல் குதிரைகளில் ஆண் கடல் குதிரைகள்தான் குட்டிகளைச் சுமந்து பிரசவிக்கும்.



உலகின் மிகப்பெரிய நீச்சல் குளம் சிலி நாட்டில் உள்ளது. அதன் நீளம், சுமார் 800 மீட்டர்.


# ஆச்சர்ய உலகம்



குளிர்ச்சியாக இருக்கும் நட்சத்திரங்கள் சிவந்த நிறத்தில் இருக்கும்; சூடான நட்சத்திரங்கள் நீல நிறத்தில் காணப்படும்.



யானையின் சாணத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்று கண்டு பிடித்திருக்கி றார்கள்.



முதன் முதலில் உருவாக்கப் பட்ட கம்ப்யூட்டர், ஒரு டென்னிஸ் மைதானம் அளவுக்குப் பெரிதாக இருந்தது.



சில டைனோசர்களுக்கு சுமார் ஆயிரம் பற்கள் கூட இருந்திருக் கிறது.



விண்வெளியில் சுற்றிக்கொண்டிருக்கும் சர்வதேச விண்வெளி ஓடத்துக்கு சுற்றுலாப்பயணிகள் செல்வதுண்டு. முதலில் இப்படிச் சென்று 10 நாட்கள் இருந்தவர், அந்தப் பயணத்துக்கு இரண்டு கோடி டாலர் கொடுத்தார்.



சில மேகங்கள் சுமார் 16 கிலோமீட்டர் உயரம் அளவுக்கு அடர்ந்து இருக்கின்றன.



யுரேனஸ் கிரகத்தின் வட துருவத்தில் தொடர்ச்சியாக 42 ஆண்டுகள் சூரிய வெளிச்சமே படாது.




வாழைப் பழத் தோலால் ஷூக்களை பாலீஷ் செய்யமுடியும்.



லெபனான் நாட்டில் ஒரு விவசாயி 11 கிலோ எடையுள்ள பிரமாண்டமான உருளைக்கிழங்கை விளைவித்திருக்கிறார்.



வளர்ந்த மனிதர்கள் ஓர் ஆண்டில் சுமார் 1,500 கனவுகள் காண் கிறார்கள்.



தேனீக்கள் பச்சை, நீலம் மற்றும் சிவப்பு நிறங்களில் உள்ளன.



சில வகை பல்லி இனங்கள் தண்ணீரின்மீது நடக்கும் வல்லமை பெற்றவை.

சிவப்பு நிறத்தைப் பார்க்கும் போது நம் இதயம் வழக்கத்தைவிட சற்றே வேகமாகத் துடிக்கிறதாம்.



மனிதர்களைவிட யானைகள் வேகமாக ஓடும்.



பனிப்பாறை களால் நிரம்பிய அன்டார்க்டிகா கண்டம், உண்மையில் ஒரு பனிப் பாலைவனம்.

உயர்கல்வி படிக்க உதவி தேவைப்படும் மாணவர்களுக்கும், உதவும் நன்கொடையாளர்களுக்கும் பாலமாக அகரம் பவுண்டேஷன் தொடங்கியதுதான், விதை திட்டம். இதன் முக்கியமான பணி, இல்ல நேர்காணல். இந்தத் திட்டத்தில் பங்கேற்று படிக்க விரும்பி விண்ணப்பிக்கும் மாணவ, மாணவிகளின் வீடுகளுக்குச் சென்று கள ஆய்வு செய்யும் பணி இது. அகரம் தன்னார்வலர்கள் இதை அர்ப்பணிப்போடு செய்கிறார்கள். ஒவ்வொரு மாணவரின் வீட்டுக்கும் சென்று, அவர்களின் வாழ்வியல் சூழலை அறிந்துகொண்டு வருகிறார்கள். இப்படிச் சென்ற பலர், தங்கள் கள அனுபவங்களை எழுதித் தந்துள்ளார்கள். எவரையும் நெகிழ வைக்கும் பதிவுகள் அவை. அவற்றில் ஒன்று...



# ஒற்றை வரியில் முடிக்கமுடியாத வாழ்க்கை!

பிறந்தது முதல் சென்னையை மட்டுமே பார்த்து வளர்ந்த நான், முதல்முறையாக ஒரு குக்கிராமத்துக்குள் அகரம் வழியாகவே நுழைந்தேன். அந்தப் பயணங்களில் மெய்சிலிர்த்த தருணங்கள், நல்ல மனிதர்களின் சந்திப்பு, வழிகாட்டிகளின் கைகுலுக்கல் என சொல்வதற்கு ஆயிரம் அனுபவங்கள் இருக்கின்றன.

முகவரியே தெரியாது. ஆனால், ஒரு மாணவியின் பெயரையும் ஊர்ப் பெயரையும் மட்டும் வைத்துக்கொண்டு அந்த மாணவியைத் தேடிக் கண்டுபிடித்து அகரம் விதைத் திட்டத்தில் இணைத்துப் படிக்க வைத்தோம். சிறு வயதில் தந்தையை இழந்து, நோயாளியான தாயைக் கவனித்துக்கொண்டு 1100 மதிப்பெண்களுக்கும் மேல் வாங்கிய மாணவன் இன்று அகரத்துடன் பயணம் செய்கிறார். ஒற்றை வரியில் சொல்லி முடிக்க முடியாத வாழ்க்கை அது. இப்படிப்பட்டவர்களைச் சென்றடைந்த வழிதான் ஆகச்சிறந்த அனுபவம்.

என்னுடைய முதல் ஹவுஸ் விசிட் வாணியம்பாடி, ஆம்பூர், அங்கிருந்து திருவண்ணாமலை. வாணியம்பாடியில் நான் சந்திக்கச் சென்ற மாணவனின் வீடு ஒரு எளிய குடிசை. மின்சாரம் கிடையாது. அப்பாவும் அம்மாவும் கூலி வேலை செய்கிறார்கள். மாலை 6 மணிக்கு மேல் மின்சாரமே இல்லாமல் அந்த மாணவன் எப்படிப் படித்திருப்பார்? என் சந்தேகத்தைக் கேட்டேன். அந்த மாணவர் என்னை அழைத்துச் சென்று, தூரமாக இருந்த ஒரு வீட்டைக் காட்டினார். அந்த வீட்டில் வெளியே லைட் போட்டு விடுவார்களாம். ''இரவு 10 மணி வரை அந்த விளக்கு எரியும். அந்த வெளிச்சத்தில் படித்துவிட்டு வீட்டுக்கு வந்துவிடுவேன்'' என்றார். இரவு முழுக்க விளக்குகள் வெளிச்ச மழை பொழியும்

மாநகரத்து இளைஞனுக்கு இது நிச்சயம் அதிர்ச்சி கொடுக்கும் ஒரு வாழ்க்கை. அந்த அதிர்ச்சியை மனதிலும் படிவத்திலும் பதிவு செய்துகொண்டு வந்தேன்.

ஒரு முறை காஞ்சிபுரம் ஹவுஸ் விசிட் போயிருந்தேன். வரிசையாக பல வீடுகளையும் முடித்தேன். ஒரே ஒரு வீடு மட்டும் மிச்சமிருந்தது. அன்று மிகவும் சோர்வாக உணர்ந்தேன். அகரம் அலுவலகத்துக்கு போன் செய்து ஜெயஸ்ரீயிடம் இதைச் சொன்னேன். ''ஒரு வீடு மட்டும் விட்டுப் போயிடுச்சு. அட்ரஸ் அரசு மறுவாழ்வு மையம்னு போட்டிருக்கு. கண்டிப்பா உதவி தேவைப்படுற மாணவனாதான் இருக்கும். ஆனா, என்னால போக முடியாது போலிருக்கு. நான் திரும்பி வந்துறவா?'' என்று கேட்டேன். ''இல்லைப்பா... சும்மா போய்ப் பார்த்துட்டு வந்துரு'' என்று சொன்னார்.

பரனூர், காஞ்சிபுரம். யாரைக் கேட்டாலும், ''தெரியல... தெரியல...'' என்றே சொன்னார்கள். ''மெயின் ரோட்லதான் இருக்கு'' என்று சொல்கிறார்கள். ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை. மெயின் ரோட்டில் பார்த்த ஒருவரிடம், ''அரசு மறுவாழ்வு மையம் எங்கே?'' என்று கேட்டால், ''இங்க அப்படி எதுவும் இல்லையே'' எனக் கையை விரித்தார். தேடிக்கொண்டே போனபோது, அருகிலேயே 'அரசு மறுவாழ்வு மையம்' என போர்டு இருந்தது. மனசுக்குள் அந்த ஆளைத் திட்டிக்கொண்டே உள்ளே போனேன். அப்புறம்தான் தெரிந்தது. அது, தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மையம். அப்படிச் சொல்லியிருந்தால் யாராக இருந்தாலும் தெளிவாக வழி சொல்லியிருப்பார்கள்.



உள்ளே போனதும், அந்த சூழலில் ஒரு நிமிஷம் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

கொஞ்ச நேரத்தில் ஒரு பெரியவர் வந்தார். ''எங்க பையனை படிக்க வெக்கவா வந்து இருக்கீங்க?'' என்று கேட்டார். தயக்கத்துடனும் அதிர்ச்சியுடனும் ''ஆமாம்'' என்றேன். அவர் என்னை அந்த மாணவனின் பெற்றோரிடம் கூட்டிப் போனார். வயதான அப்பா, அம்மா. அவர்களுக்கு என்ன பிரச்னை என அவர்கள் இருக்கும் இடமே தெளிவாகச் சொல்கிறது. இந்த சூழ்நிலையில் ஒருவர் வாழ்வதே பெரிது. அதிலும் அவர் நன்றாகப் படிக்கிறார் என நினைக்கும்போது ஆச்சர்யமாக இருந்தது. அவர் எப்படியாவது படித்து மேலே வந்துவிட வேண்டும் என மனசு சொன்னது. அங்கே இருந்த எல்லோரும் என்னிடம் வந்து, ''எப்படியாவது இந்தப் பையன படிக்க வெச்சுருங்க சார்'' என்றார்கள். அப்படி ஒரு சூழலை நான் அதுவரை எதிர்கொண்டதில்லை. இன்றைக்கு அந்த மாணவனும் அகரத்தில் இருக்கிறார்.

ஈரோடு கள ஆய்வுக்குப் போனபோது அந்த மனிதரைப் பார்த்தேன். அவர் பெயர் ராபின். கிரீன் கிராஸ் என்ற பெயரில் ஓர் இயற்கைப் பாதுகாப்பு அமைப்பு நடத்துகிறார். அகரம் கள ஆய்வுகளுக்குச் செல்கிற எங்களைப் போன்றவர்களுக்கு உதவி செய்கிற உள்ளூர் தன்னார்வலர். உதவி என யார் வந்தாலும், உடனே செய்பவர். ஒரு சின்ன விஷயம் சொல்கிறேன்... நாங்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது அவருக்கு ஒரு போன் வந்தது. போனில் பேசியவர்களிடம், ''பதற்றப்படாதீங்க, அடிச்சு சாகடிச்சுடாதீங்க. எங்க பசங்க வந்துக்கிட்டே இருக்காங்க'' என சொல்லிவிட்டு போனை வைத்தார். பிறகு யாருக்கோ போன் செய்தார்.

கொஞ்ச நேரம் கழித்து அவர்களின் டீம் வந்தது. நான் உட்கார்ந்து கொண்டிருந்த நாற்காலியின் கீழே ஒரு பையை வைத்துவிட்டுப் போனார்கள். ''என்ன ஆச்சு?'' என்று தயங்கித் தயங்கிக் கேட்டேன். ''அது ஒண்ணும் இல்ல கார்த்திக். பக்கத்துல ஒரு வீட்ல பாம்பு புகுந்துடுச்சு. அதான் அவங்க போன் செய்தாங்க. அங்கேதான் பசங்க போனாங்க'' என்றார். ''பாம்பைப் பிடிச்சுட்டாங்களா'' என்று கேட்டேன். ''புடிச்சுட்டாங்க, உங்க நாற்காலிக்குக் கீழேதான் இருக்கு'' என்றார். ஒரு நிமிஷம் பயத்தில் முதுகுத்தண்டு ஜில்லிட்டது. அவர் எழுந்துவந்து, என் நாற்காலி அருகே இருந்த பையைத் திறந்து, உள்ளேயிருந்து ஐந்து அடி நீளத்துக்கு ஒரு பாம்பை எடுத்து, ''கைல புடிங்க'' என நீட்டினார். ''அட, போங்க சார்! ஆள விடுங்க'' என வெளியில் ஓடிவிட்டேன். பிறகு அவரிடம் பேசும்போதுதான் தெரிந்தது, இதை அவர் சேவையாகச் செய்து வருகிறார் என்பது.

12 வருட பள்ளிப் படிப்பு கற்றுக் கொடுக்காததை, நான்கு வருட கல்லூரி வாழ்க்கையில் தெரிந்துகொள்ளாததை, அகரம் கள ஆய்வுப் பயணங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்தன.

**– கார்த்திகேயன் ஆனந்தன்**



# சிங்கங்களின் சோக முடிவு!

‘ஆசிய சிங்கங்களின் கடைசிப் புகலிடம்’ என குஜராத் மாநிலத்தின் கிர் காடுகளைச் சொல்வார்கள். இந்தியாவில் மட்டுமில்லை, ஆசியாவிலேயே காடுகளில் சிங்கங்கள் வாழ்வது இங்கு மட்டும்தான். மற்ற இடங்களில், உயிரியல் பூங்காக்களில் மட்டுமே ஆசிய சிங்கங்கள் உள்ளன.

கிர் காடுகளை குஜராத் மாநில அரசு தங்களின் பெருமிதங்களில் ஒன்றாகக் கருதுகிறது. சுமார் 1,412 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட இந்தக் காடுகளில் சிங்கங்கள், வங்கப் புலிகள், சிறுத்தைகள் ஆகியவை உள்ளன. 2015–ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 14வது ஆசியச் சிங்கங்களின் கணக்கெடுப்பின்படி, கிர் தேசியப் பூங்காவில் 523 சிங்கங்கள் உள்ளன. இவற்றில் ஆண் சிங்கங்கள் 109, பெண் சிங்கங்கள் 201 மற்றும் இளஞ் சிங்கங்கள் 213. ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மத்திய அரசும் குஜராத் மாநில அரசும் பல வழிகளில் முயற்சி செய்து வருகிறது.

இந்நிலையில் செப்டம்பர் 12 முதல் அக்டோபர் 1 வரையிலான 20 நாட்களில் மட்டுமே இங்கு 23 சிங்கங்கள் இறந்துள்ளது சர்வதேச அளவில் விலங்குகள் நல ஆர்வலர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சிங்கங்கள் எப்போதும் குழுக்களாக வசிக்கும் இயல்புள்ளவை. இப்படி கிர் தேசியப் பூங்காவின் ஒரு பகுதியில் குழுவாக வாழ்ந்த 26 சிங்கங்களில் 23 சிங்கங்கள் இறந்துவிட்டன. இந்தக் குழுவில் இருந்த எஞ்சிய மூன்று சிங்கங்களும் நோய்வாய்ப்பட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணமாகச் சொல்லப்படுவது, Canine Distemper Virus (CDV) மற்றும் tick-borne Babesiosis தொற்று ஆகியவை.

ஆப்ரிக்க நாடான தான்சானியாவில் உள்ள செரெங்கெட்டி தேசிய பூங்காவில் கடந்த 1994–ம் வருடம் இந்த இரண்டு நோய்த்தொற்றுகளும் பரவியதால், அந்தக் காடுகளில் இருந்த மொத்த சிங்கங்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு சிங்கங்கள் வெறும் 15 நாட்களில் இறந்து போயின. எண்ணிக்கையில் பார்த்தால் இன்னும் மலைப்பாக இருக்கும். சுமார் 1,000 சிங்கங்கள் அப்போது இறந்தன. ‘என்ன நடந்தது’ என்று கால்நடை மருத்துவ ஆய்வாளர்கள் வந்து பரிசோதனை செய்வதற்குள் எல்லாம் நடந்து முடிந்துவிட்டன.

சிங்கங்களின் இறப்புக்குக் காரணமாக அப்போது சொல்லப்பட்ட ஒரு நோய், கெனைன் டிஸ்டெம்பர் வைரஸ். இது பூனைகள் மற்றும் நாய்களிடமிருந்து வனவிலங்குகளுக்குப் பரவும் ஒரு வகை வைரஸ். காடுகளை விட்டு வெளியே வரும் சிங்கங்களை இவ்வகை வைரஸ்கள் தாக்குகின்றன. சிங்கங்கள் தாங்கள் வேட்டையாடும் இரையை முழுவதுமாகத் தின்று முடிப்பதில்லை. கொஞ்சம் மிச்சம் வைத்துவிட்டுச் செல்கின்றன. இப்படி சிங்கங்கள் மிச்சம் வைப்பதை நாய்களும் உணவாக எடுத்துக் கொள்கின்றன. அதன்பின் சிங்கக் கூட்டத்தில் இருக்கும் குட்டிகளும் இதை வந்து தின்கின்றன. இதன்மூலம் சிங்கங்களுக்கு இந்த வைரஸ்கள் எளிதாகப் பரவிவிடுகின்றன.

இன்னொரு நோய்த்தொற்று, டிக் போர்ன் பேபிசியோசிஸ். மனிதர்களைத் தாக்கும் மலேரியா நோய்க்கிருமி போன்ற ஒருவகைக் கிருமியால் ஏற்படும் நோய் இது. இந்த நோய்க்கிருமி முதலில் காட்டெருமைகளைத் தாக்கும். இந்தக் காட்டெருமைகள் இறந்ததும், அவற்றைச் சாப்பிடும் சிங்கங்களின் உடலுக்குள் போய்விடும். தனிப்பட்ட முறையில் கெனைன் டிஸ்டெம்பர் வைரஸோ, டிக் போர்ன் பேபிசியோசிஸ் தொற்றோ ஒரு சிங்கத்தைக் கொல்வதில்லை. இரண்டும் ஒரே நேரத்தில் தாக்கும்போது மரணம் தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது.

சுமார் 24 ஆண்டுகள் கழித்து அதே நோய்கள் இப்போது இந்திய சிங்கங்களைக் காவு வாங்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ‘தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இதைத் தவிர்த்திருக்கலாம். இதுபற்றி எச்சரித்தும் குஜராத் அரசு



கேட்கவில்லை' என்பதுதான் நிபுணர்களின் ஆதங்கம்.

''இந்தியாவின் அத்தனை சிங்கங்களும் ஒரே ஒரு தேசிய பூங்காவில் மட்டுமே இருப்பது ஆபத்து. ஏதாவது ஒரு பேரழிவு தாக்கும்போது அத்தனை சிங்கங்களும் மொத்தமாக அதை எதிர்கொள்ள நேரிடும். கிர் காடுகளில் இருக்கும் சிங்கங்களில் சிலவற்றை வேறு ஏதாவது தேசிய பூங்காவுக்கு பாதுகாப்பாக இடம் மாற்றலாம்'' என சர்வதேச சிங்கங்கள் பாதுகாப்பு நிபுணர் கிரெய்க் பேக்கர் யோசனை தெரிவித்தார். கடந்த 95-ம் ஆண்டு இதற்கான முயற்சிகள் நடைபெற்றன. பக்கத்தில் இருக்கும் மத்தியப் பிரதேச மாநிலத்தின் குணோ பால்புர் தேசிய பூங்காவுக்கு சிங்கங்களை அனுப்பலாம் என முடிவெடுக்கப்பட்டது.



ஆனால், தங்கள் மாநிலத்தின் தனிப்பெருமையாகக் கருதப்படும் சிங்கங்களை இன்னொரு மாநிலத்துக்குக் கொடுக்க குஜராத் சம்மதிக்கவில்லை. இதைத் தொடர்ந்து விலங்குகள்நல ஆர்வலர்கள் சிலர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார்கள். 2013-ம் ஆண்டு நீதிமன்றமும் மத்தியப் பிரதேசத்துக்கு சிங்கங்கள் சிலவற்றை இடமாற்றம் செய்யுமாறு உத்தரவிட்டது. அதையும் குஜராத் அரசு பின்பற்றவில்லை.

அதேபோல, கிர் தேசியப் பூங்காவில் இருக்கும் சிங்கங்களுக்கு கெனைன் டிஸ்டெம்பர் வைரஸ் தாக்குதல் இருப்பதாக 2011 முதலே உயிரியல் ஆய்வாளர்கள் எச்சரித்து வருகிறார்கள். ஆனாலும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் செய்யப்படவில்லை.

இப்போது பிரச்னை முற்றி சிங்கங்கள் இறந்ததும், எல்லா மட்டங்களிலிருந்தும் கேள்விகள் கிளம்பிவிட்டன. எப்போதும் இல்லாத அளவுக்கு அரசியல் தலைவர்களாலும் இந்த விஷயம் விவாதிக்கப்படுகிறது. ஆனாலும், இப்போதும் மத்தியப் பிரதேசத்துக்கு சிங்கங்களை அனுப்ப குஜராத் தயாராக இல்லை. கிர் காடுகளுக்கு 80 கி.மீ தொலைவில், குஜராத்திலேயே இருக்கும் பர்டா துங்கர் தேசியப் பூங்காவுக்கு சில சிங்கங்களை இடமாற்றம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சிங்கங்களுக்கு தடுப்பு மருந்துகள் போடவும் திட்டமிடப்படுகிறது.

இதை முன்பே செய்திருந்தால், சிங்கங்கள் இறக்காமல் தடுத்திருக்கலாம். சிங்கங்களை தங்களின் தனிப்பெருமையாக நினைக்கும் குஜராத் அரசு, அவற்றைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.



## நமது பள்ளி

● **சுதந்திர தின விழா:** மறைமலை நகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 15.08.2018 அன்று 72வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். ரோட்டரி மன்ற நகரத் தலைவர், அரசியல் பிரமுகர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் விருந்தினர்களாக வந்திருந்து, தங்களது அனுபவங்களைப் பகிர்ந்தனர். ஆசிரியர்களின் உதவியுடன் சில மாணவர்கள் பேச்சு, கட்டுரை, கவிதை, நடனம் மற்றும் நாடகம் போன்றவற்றுக்குத் தங்களைத் தயார்செய்துவந்து, சுதந்திர தின விழாவில் தங்களது திறமைகளை நிரூபித்தனர். கடந்த ஆண்டு பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பிடித்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியாக வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகத்தை அரங்கேற்றம் செய்து, வந்திருந்தவர்களை தங்கள் நடிப்பால் மெய்சிலிர்க்க வைத்தனர்.

● **சுதந்திர தின விழா:** கருங்குழி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலும் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். ஆசிரியர்களின் உதவியோடு மாணவர்கள் பேச்சு, கட்டுரை, கவிதை, நடனம் மற்றும் நாடகம் போன்றவற்றில் தங்களைத் தயார் செய்துவந்து, சுதந்திர தின விழாவில் தங்களது திறமைகளை நிரூபித்தனர். இறுதியாக வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகத்தை அரங்கேற்றம் செய்து, பார்வையாளர்களை தங்கள் நடிப்பால் மெய்சிலிர்க்க வைத்தனர்.

● **மாணவர்களின் நேர்காணல்:** மறைமலை நகர் அரசு மேல்நிலைப் பள்ளியிலும், கருங்குழி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலும், ஆறாம் வகுப்பில் சேர்ந்த மாணவர்களுக்கு நேர்காணல் மூலமாக நம்பிக்கை விதைக்கப்பட்டது. பள்ளியின் கற்கும் சூழல் பற்றிய புரிதலை அவர்கள் பெற இது உதவியது. மாணவர்களிடம் பேசி, அவர்கள் இதுவரை படித்த பள்ளி பற்றிய விவரங்கள், மாணவர்களின் ஆர்வம், பிடித்த செயல்கள், எதிர்காலக் கனவுகள், அவர்களின்



## பனை விதை நடுதல்



நீர் மேலாண்மையில் பனை மரத்தின் பங்களிப்பு மிகவும் முக்கியம். எனவே, பனை விதைகளை தொடர்ந்து பல பகுதிகளில் விதைத்து வருகின்றோம். இதன் தொடர்ச்சியாக திருநெல்வேலி மாவட்டம் வடக்கன்குளம் பகுதியில் உள்ள குளத்தில் பனை விதைகள் நட முடிவு செய்யப்பட்டது. சுற்றுச்சூழல் பாசறை, வடவை மண்ணின் மைந்தர்கள் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் நம்முடன் இணைந்தார்கள்.

1,000 பனை விதைகள் சேகரிக்கப்பட்டு, 23.09.2018 அன்று நடப்பட்டன. இந்த நிகழ்வில் 70க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர். ஒருவர் மண்வெட்டியால் குழி வெட்டுவது, அடுத்தவர் பனை விதையைக் குழியில் போட்டு மூடுவது, இன்னொருவர் விதைகளைப் பிரித்து கொடுப்பது, விதைப்பவர்களுக்கு தண்ணீர் மற்றும் மோர் கொண்டுவந்து கொடுக்க சிலர் என்று பலரும் சிறப்பாகக் களப்பணி செய்தனர்.

# நிகழ்வுகள்



அடிப்படைத் தகவல்கள், குடும்பப் பின்னணி ஆகியவையும் இந்த நேர்காணல் மூலம் அறிந்து கொள்ளப்பட்டன.

● **உடல்மொழிப் பயிற்சி:** மாணவர்களின் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த ஒரு தளமாக, 27.08.2018 முதல் 29.08.2018 வரை மூன்று நாட்கள் உடல்மொழிப் பயிற்சி திட்டமிடப்பட்டது. முதல் நாளில், நிற்கும்போதும் நடக்கும்போதும் பார்வை மற்றும் அசைவுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. நடுநிலையாக நிற்கும்போது, நாம் என்ன நினைக்கிறோம் என்பதை மற்றவர்களால் அறிந்துகொள்ள முடியாது என்பதை விளக்கிச் செய்து காட்டினார் பயிற்சியாளர். இரண்டாம் நாளில், வெவ்வேறு விதங்களில் உயிரெழுத்துகளை குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் சொல்வது எப்படி என கற்றுக்கொடுத்தார். பின்னர் கண் அசைவுகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியாளர் அதை கடிகார முள்ளுக்கு இணையாகக் கூறினார். Focus Training கற்றுக் கொடுக்கப்பட்டது. இந்த இரண்டு நாட்களில் தாங்கள் கற்றுக்கொண்டதை மாணவர்கள் மூன்றாம் நாள் வெளிப்படுத்தினர். நாடகக்கலை நுணுக்கங்களையும், தங்களின் கற்பனைத்திறனையும் பயன்படுத்தி நாடகம் அரங்கேற்றினர். இந்த நாடகத்தில் சிறப்பாக நடித்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு மேலும் பயிற்சிகளும் வழங்கப்படும்.

● **ஆசிரியர்கள் சந்திப்பு:** மறைமலை நகர் பள்ளியில் 28.08.2018 அன்று ஆசிரியர்கள் சந்திப்பு நடைபெற்றது. பள்ளியின் முக்கிய அங்கமாக இயங்கும் ஆசிரியர்களை சந்தித்து, கடந்த ஆண்டு அகரம் நமது பள்ளித் திட்டத்தின் செயல்பாடுகளும் அவற்றின் நல்ல பலன்களும் விவரிக்கப்பட்டன. இந்த ஆண்டு மாணவர்களின் முன்னேற்றத்துக்காக அகரம் பவுண்டேஷன் திட்டமிட்டுள்ள செயல்பாடுகள் பற்றி விவரித்து கலந்துரையாடல் நடைபெற்றது.

● **மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று பார்வையிடல்:** மறைமலை நகர் மேல்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு பயிலும் 43 மாணவர்களின் வீடுகளுக்கு 31.08.2018 அன்று 'நமது பள்ளி' தன்னார்வலர்கள் குழு நேரில் சென்று பார்வையிட்டது. அவர்களின் குடும்பப் பின்னணி மற்றும் மாணவர்களின் கல்வி மீதான பெற்றோர்களின் விருப்பம் போன்றவற்றைத் தெரிந்துகொள்ள இது உதவியது. 'பெற்றோர்களும் பள்ளியின் ஓர் அங்கம்' என எடுத்துக்கூறி, அவர்களை பள்ளியின் செயல்பாடுகளில் ஈடுபடவைக்க இந்த சந்திப்பு உதவியது.

● **விளையாட்டுப் பயிற்சி:** மறைமலை நகர் பள்ளியில் 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு விளையாட்டில் அதிகமான ஆர்வம் உள்ளது. இவர்களுக்கு த்ரோ பால், கேரம், செஸ், கால்பந்து, கோகோ, கபடி மற்றும் தடகள விளையாட்டு போன்ற பிரிவுகளில் சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. விளையாட்டின் வழியே மாணவர்களை நெறிப்படுத்துவதற்கும், குழுவாக இணைந்து செயல்படும் திறனை வளர்த்தெடுக்கவும் இந்தப் பயிற்சி உதவுகிறது.

## குளத்தில் மீன் விடுதல்



திருநெல்வேலி மாவட்டம் காவல்கிணறு பெருமாள் புதுக்குளத்தின் வரத்துக் கால்வாய்களை தூர் வாரியதால் இந்த ஆண்டு குளம் நிரம்பியுள்ளது. இந்தக் குளத்தில் பலரும் வந்து குளிக்கிறார்கள். இன்னும் அதிகமான மக்களை, குறிப்பாக இளைஞர்களை குளத்துக்கு வரவைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், குளத்தில் மீன்குஞ்சுகள் விட முடிவு செய்யப்பட்டது. இதற்கான செலவை ஏற்க திரு. செல்வ ஜான்சன், திரு. அருள் ஜெக ரூபர்ட் ஆகியோர் ஏற்றனர். அம்பாசமுத்திரம் சென்று 5,000 ரூபாய்க்கு கட்லா மற்றும் கெண்டை மீன் குஞ்சுகள் வாங்கிவந்து குளத்தில் விடப்பட்டன. இன்னும் ஆறு மாத காலத்துக்குள் இந்த மீன் குஞ்சுகள் பெரிதாக வளர்ந்து விடும். அதன்பின் பலரும் மீன் பிடிக்க குளத்துக்கு வருவார்கள். இதனால் குளம் நன்கு பராமரிக்கப்படும். ●

# சமூகச் சூழலை அரசுப் பள்ளிகளே மாற்றும்!



‘ஒருவரை ஆழமாகவும் விமர்சனபூர்வமாகவும் சிந்திக்க வைப்பதே கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும். அதாவது, அறிவுத்திறனுடன் கூடிய பண்பாளர்களை உருவாக்குவதே கல்வியின் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும்.’ புகழ்பெற்ற சமூகப் போராளியான மார்ட்டின் லூதர் கிங்கின் அற்புதமான வரிகள் இவை. இந்த வரிகளுக்கு பொருத்தமாக இருக்கிறது விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், நவமால் மருதூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி. சாதிய மோதல்கள் அதிகம் நடக்கும் பகுதியில் உள்ள பகுதி இது. சமீப பத்தாண்டுகளாக இந்தப் பகுதியில் பதற்றம் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கிறார், இந்தப் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றும் தனம். கடந்த 17 ஆண்டுகளாக இந்தப் பள்ளியில் பணியாற்றிக்கொண்டிருக்கும் இவர், ‘‘அரசுப் பள்ளிகள் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் விதையாக இருக்க முடியும்’’ என்கிறார்.




‘‘முன்பெல்லாம் அடிக்கடி இந்தப் பகுதியில் 144 தடை உத்தரவு போடுவார்கள். இப்போது அது வெகுவாகக் குறைந்திருக்கிறது. கல்வியைத் தருவதுடன், சாதிய வன்முறைகள் கூடாது என்பதையும் மாணவர்களுக்கு சொல்லித்தருகிறோம். இது நடுநிலைப்பள்ளிதான். மாணவர்கள் தங்கள் பாதையைத் தீர்மானிக்கமுடியாத ஆரம்ப காலத்தில்தான் எங்களிடம் படிக்கிறார்கள். ஆனால், தொடர்ந்து படிக்க அவர்களை ஊக்கப்படுத்துவதன் காரணமாக பெரும்பாலானவர்கள் கல்வியைத் தொடர்கிறார்கள். என்னுடைய மாணவர்கள் பலர் வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். பெண்கள் கல்லூரிக்குப் போகிறார்கள். சிலர் வெளிநாடுகளில் படிக்கிறார்கள்’’ என நெகிழ்ச்சியோடு பகிர்ந்துகொண்டார் தனம்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதி திராவிடர் இனங்களைச் சேர்ந்தவர்களே வசிக்கும் இந்த ஊரில், ‘அரசுப் பள்ளிக்கு வருபவர்களில் 90 சதவிகிதத்தினர் ஆதி திராவிட சமூகத்தினரின் பிள்ளைகளே’ என்கிறார் ஆசிரியர் தனம். ‘வறுமை, அப்பாவின் குடிப் பழக்கம், பெற்றோரைப் பிரிந்திருத்தல் என பல்வேறு வாழ்வியல் நெருக்கடிகளுக்கிடையே பெரும்பாலான குழந்தைகள் பள்ளிக்கு வருகிறார்கள்’ என்று குறிப்பிடுகிறார் தனம்.

‘‘தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள், மாணவர்களை நெருங்கிப் போய் கவனிப்பதெல்லாம் நடக்கவே முடியாத விஷயம். பள்ளி நேரத்தைத் தாண்டியதும், அவர்களின் உறவு முடிந்துவிடுகிறது. வீட்டுக்குச் சென்று அந்தக் குழந்தை என்ன செய்கிறது என்பதை பற்றி அவர்கள்



அக்கறை கொள்ளத் தேவையில்லை; அக்கறை கொள்வதும் இல்லை. ஆனால், அரசுப் பள்ளிகளில் அப்படி இருக்கவே முடியாது. ஒவ்வொரு மாணவரையும் தனிப்பட்ட முறையில் நெருங்கிப் பேசுகிறோம். அவர்களின் வாழ்வியல் சூழலை அறிந்துகொண்டு, அதன்படியே கல்வி தருகிறோம்.




சில குழந்தைகள் வீட்டில் தூங்க முடியாமல் பள்ளியில் வந்து வகுப்பின்போது தூங்கிவிடுவார்கள். அவர்களை அதட்டுவதால் ஒரு பயனும் இல்லை. விசாரித்து, அதற்கான தீர்வைத் தேடித்தான் நாங்கள் போவோம். அதுபோல காலை நேரங்களில் சாப்பிடாமல் வருகிறவர்கள் அதிகம். பட்டினியோடு இருப்பவர்களுக்கு பாடம் சொல்லித்தர முடியுமா? அவர்களுக்கு உணவளிக்க முற்படுகிறோம். நிறைய அரசு பள்ளிகள் ஸ்பான்சர்களைப் பிடித்து மாணவர்களுக்கு காலை உணவளிக்கின்றன. இந்த அக்கறையையும் அர்ப்பணிப்பையும் அரசுப் பள்ளிகளில் மட்டும்தான் பார்க்க முடியும்'' என்று பெருமிதத்துடன் சொல்கிற ஆசிரியை தனம், பள்ளிக்கல்வி பாதுகாப்பு இயக்கத்தின் விழுப்புரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளார். நடுவில் வேறு பள்ளிக்கு மாறுதல் வழங்கப்பட்டபோது, விருப்பப்பட்டு இதே பள்ளிக்கு மாறுதல் வாங்கி வந்திருக்கிறார். புதுச்சேரியிலிருந்து தினமும் நவமால் மருதூருக்கு பேருந்தில் வந்து செல்கிறார்.

''வறுமை நிலையில் இருக்கிற எவரையும் கல்வி ஒன்றுதான் முன்னேற்றும் என திடமாக நம்புவதால், இதே பள்ளியில் தொடர்ந்துகொண்டிருக்கிறேன். எல்லா விஷயங்களுக்கும் அரசை நம்பியிருந்தால் பலன் கிடைக்காது என்பதால், என்னைப் போன்ற பல அரசுப் பள்ளி ஆசிரியர்கள் செயலில் இறங்கியிருக்கிறோம். 220 மாணவர்கள் படிக்கும் எங்கள் பள்ளியில் முழுநேர ஆசிரியர்கள் ஒன்பது பேரும், பகுதிநேர ஆசிரியர்கள் மூன்று பேரும் பணியில் இருக்கிறோம். தலைமை ஆசிரியரின் கீழ் அனைத்து ஆசிரியர்களும் ஒன்றாகச் சேர்ந்து, பள்ளியின் மேம்பாட்டுக்கு என்னென்ன செய்யலாம் என்று தீர்மானித்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், ஸ்மார்ட் கிளாஸ், எல்.இ.டி டி.வி என பள்ளியின் கட்டமைப்பு வசதியை மேம்படுத்தியிருக்கிறோம். அனைத்து விழாக்களையும் கொண்டாடுகிறோம். மாணவர்கள் போட்டிகளில் தன்னம்பிக்கையுடன் கலந்துகொள்கிறார்கள்'' என்கிற தனம், தானும் அரசுப் பள்ளியில் படித்த மாணவிதான் என பெருமிதத்துடன் குறிப்பிடுகிறார்.



போதிய மாணவர்கள் இல்லாத பள்ளிகளை அரசு மூடப்போவதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இதைத் தடுக்க ஓர் அரசுப் பள்ளி ஆசிரியராக தனம் என்ன சொல்கிறார்?

''சிறப்பான அரசின் நலத்திட்டங்கள் உள்ள அரசுப் பள்ளிகள் மூடப்படுவதைத் தடுக்க வேண்டுமானால், நிச்சயம் தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் தருவதை அரசு நிறுத்தி வைக்க வேண்டும். புற்றீசல் போல் பெருகிவரும் அங்கீகாரம் பெறாத தனியார் பள்ளிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த மாணவர்கள், அந்தக் குறிப்பிட்ட பகுதியில் உள்ள பொதுப் பள்ளிகளில்தான் படிக்க வேண்டும் என்கிற சூழலை அரசு உருவாக்க வேண்டும்'' என்கிறார்.

''அரசுப் பள்ளி என்பது ஊரோடு பிணைக்கப்பட்ட ஓர் உறவு. அந்த ஊரின் சமூகச் சூழலை, அரசு பள்ளிகள் நினைத்தால் மாற்ற முடியும். அந்த வகையில் ஓர் அரசுப் பள்ளி, ஊர்க் குழந்தைகளின் கல்வியில் அக்கறை கொள்கிறது. அதுபோல ஊர் மக்களும் பள்ளியின் வளர்ச்சியில் அக்கறை கொள்கிறார்கள். இந்தப் பிணைப்புதான் சமூக மாற்றத்துக்கு அஸ்திவாரம் போடுகிறது. எங்கள் பள்ளியின் மேம்பாட்டுப் பணிகள் அத்தனையும், ஊர் மக்கள் நெகிழ்ச்சியோடு செய்தவையே. காலில் அடிபட்டு பயணிக்க முடியாத நிலையில் சில மாதங்கள் இந்த ஊரிலேயே தங்கியிருந்தேன். அப்போது என்னைப் பார்த்துக்கொண்டது ஊர் மக்களும் என்னுடைய மாணவர்களுமே. அவர்களுக்கு பணி செய்வதை அர்ப்பணிப்போடு செய்கிறேன்'' என முடிக்கிறார் தனம்.

– மு.வி.நந்தினி






## வட்டியில்லா கல்விக்கடன்!

'கல்லூரி மாணவர்களுக்கு வட்டியில்லாத கல்விக்கடன் வழங்குவதற்கான மத்திய அரசின் பட்ஜெட் ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்' என மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் அறிவித்துள்ளார்.

கடந்த 2014–ம் ஆண்டில் ரூ.800 கோடியாக இருந்த இந்த உதவி, இப்போது ரூ.1,800 கோடியாக உயர்ந்துள்ளது. இதன்மூலம் சுமார் எட்டு லட்சம் மாணவர்கள், கல்விக்கடனுக்கு வட்டித் தள்ளுபடி பெறுகிறார்கள். அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பத்து லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்த ஒதுக்கீடு ரூ. 2,200 கோடியாக உயர்த்தப்படுகிறது.

உயர்கல்விக்கான மனிதவளம் பற்றிய மாநிலக் கல்வி அமைச்சர்கள் கருத்தரங்கில் இதைத் தெரிவித்துள்ளார் மத்திய அமைச்சர். அது மட்டுமில்லை, நாடுமுழுக்க வகுப்பறைகளை நவீனப்படுத்தவும் மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. இந்தியா முழுக்க 15 லட்சம் பள்ளிகளில் 'ஆபரேஷன் டிஜிட்டல் போர்டு' திட்டத்தின்படி டிஜிட்டல் கரும்பலகைகள் ஏற்படுத்தப்படும். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் இந்தியா முழுக்க எல்லா பள்ளிகளிலும் இந்த டிஜிட்டல் போர்டு வந்துவிடும்.

பாடங்களை 360 டிகிரி கோணத்தில் முழுமையாக மாணவர்கள் படித்து அறிய இந்த வசதி உதவும். எல்லா பாடங்களையும் பற்றி இணையத்தில் தேடி கூடுதலாகத் தெரிந்துகொள்ள முடியும்.


## கல்விக்கான முதலீடு குறைவு!

உலகப் புகழ்பெற்ற மருத்துவ இதழான 'லேன்செட்' வெளியிட்டுள்ள ஓர் ஆய்வு, ''இந்தியா தன் அருகில் இருக்கும் மற்ற நாடுகளைவிட தன் நாட்டு மக்களின் கல்வி மற்றும் மருத்துவத் தேவைகளுக்கான முதலீட்டைக் குறைவாகவே செய்கிறது. இது இந்திய மக்களுக்கு நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தும்'' என எச்சரித்துள்ளது.

உலக வங்கிக்காக நடத்தப்பட்ட ஆய்வு இது. கடந்த 1990 முதல் 2016 வரை பல நாடுகளும் கல்வி மற்றும் மருத்துவக் கட்டமைப்புகளுக்கு செய்த செலவுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. அரசுப் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிலையங்கள் போன்றவற்றுக்கு செய்யப்பட்ட செலவுகள் கணக்கிடப்பட்டன. அரசின் இந்தக் கட்டமைப்பைக் கொண்டு மனிதர்கள் எவ்வளவு ஆரோக்கியமாக வாழ்கிறார்கள், எப்படிப் படிக்கிறார்கள் என்ற விஷயங்களும் ஆராயப்பட்டன. குறிப்பாக 20 வயது முதல் 65 வயதுவரை அவர்களால் எப்படி உழைக்க முடிகிறது என்பது கணக்கில் கொள்ளப்பட்டது. இதை மறைமுகமாக 'மனிதர்கள்மீதான முதலீடு' என்றும் எடுத்துக்கொள்ளலாம்.

உலகம் முழுக்க 195 நாடுகளில் செய்யப்பட்ட இந்த ஆய்வில், இந்தியா 158வது இடத்தில் உள்ளது. நம் பக்கத்து நாடுகள் பலவும் இதைவிட மேலான நிலையில் உள்ளன. இலங்கை 102வது இடத்திலும், மாலத்தீவுகள் 116வது இடத்திலும், பூடான் 133வது இடத்திலும் உள்ளன. இந்த ஆய்வில் முதலிடம் பிடித்திருப்பது பின்லாந்து. ஐஸ்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

''கல்விக்கும் மருத்துவத்துக்கும் அரசுகள் எவ்வளவு முதலீடு செய்கின்றனவோ, அதற்கு ஏற்றபடிதான் அந்த நாட்டின் மனிதவளம் அமைகிறது. இந்த இரண்டுக்கும் அதிகம் முதலீடு செய்தால், உள்நாட்டு உற்பத்தி அதிகமாகும். இதைப் பல தேசங்கள் புரிந்துகொள்ள மறுக்கின்றன'' என்று வேதனையுடன் சொல்கிறார், இந்த ஆய்வை நடத்திய வாஷிங்டன் பல்கலைக்கழக பேராசிரியர் கிறிஸ்டோபர் முர்ரே.



## கல்விக்கு ரூ.1 லட்சம் கோடி!

வரும் 2022–ம் ஆண்டுக்குள் இந்தியாவின் கல்விக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக ரூ.1 லட்சம் கோடி செலவிடப்படும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

Academic Leadership on Education for Resurgence கருத்தரங்கு டெல்லியில் நடைபெற்றது. யு.ஜி.சி, ஏ.ஐ.சி.டி.இ உள்ளிட்ட இந்தியாவின் உயர்கல்வி அமைப்புகள் இணைந்து நடத்திய இந்தக் கருத்தரங்கில், இந்தியா முழுக்க இருந்து 350 பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் பங்கேற்றனர். இந்தியாவின் கல்விக் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றி அவர்களுடன் மோடி உரையாடினார்.

‘‘நாளந்தா, தட்சசீலம் போன்ற இடங்களில் செயல்பட்ட நம் பழம்பெருமைக்குரிய பல்கலைக்கழகங்கள் கல்வியறிவுக்கும் புதுமை முயற்சிகளுக்கும் சம முக்கியத்துவம் கொடுத்தன. நாட்டின் வளர்ச்சிக்கு கல்வியும் புதிய முயற்சிகளும் அவசியம். புதிய முயற்சிகள் இல்லாமல், எதுவுமே அடுத்த கட்டத்துக்கு நகராது. எல்லா தளங்களிலும் புதுமைகளைப் படைக்க நம் கல்வி உதவ வேண்டும். கல்வியும் அறிவும் புத்தகத்துடன் முடிந்துவிடவில்லை. எல்லாவகையிலும் ஒரு மனிதன் சமச்சீரான வளர்ச்சியைப் பெற உதவுவதே கல்வி. இதற்குப் புதுமையான சிந்தனைகள் அவசியம்’’ என்ற மோடி, கல்வி நிறுவனங்கள் ஒன்றுடன் இன்னொன்று இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.




‘‘கல்வித் துறையில் அதிக முதலீடு செய்து புரட்சிகரமான மாற்றங்களைச் செய்ய மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்தி, கல்வி நிறுவனங்கள் இணைந்து செயல்பட வேண்டும். எந்த தனி மனிதனும், எந்த நாடும் இனி உலகத்துடன் இணையாமல் ஒதுங்கி இருக்க முடியாது. புதிய முயற்சிகளைச் செய்யவும், கண்டு பிடிப்புகளை நிகழ்த்தவும் நமக்கு இப்படிப்பட்ட இணைப்பு தேவைப்படுகிறது. மாணவர்களும், தாங்கள் வகுப்பறையில் கற்பதை தேசத்தின் எதிர்பார்ப்புகளுடன் இணைக்க வேண்டும்’’ என்று சொல்லியிருக்கிறார் பிரதமர் மோடி.

# உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

**யாதும்** AGARAM FOUNDATION
நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

**சந்தாதாரர் ஆகுங்கள்!**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | | |
| முகவரி | | | |
| தொலைபேசி | | அலைபேசி | |
| மின்னஞ்சல் | | | |

டிக் செய்யவும்

- ☐ ஓர் ஆண்டு ரூ.150
- ☐ இரண்டு ஆண்டுகள் ரூ.300

இப்படிவத்தை நிரப்பி செக்/ டி.டி.யுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்:

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55 ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை– 600 033. போன்: 99529 20801
email: contactyadhum@gmail.com

காசோலை / வரைவோலை மூலம் அனுப்பலாம். KARU CREATIONS என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

# “உயிர்களின் மூதாதையர் பாசிகள்தான்!”

பாசியியல் ஆய்வாளர் டாக்டர் **மு.பாலுசாமி**

பூமியில் உள்ள ஒவ்வொரு உயிரும் அதனதன் பணியை செய்துகொண்டிருப்பதே, நாம் வாழும் இந்த சூழல் நீடித்து நிலைக்கக் காரணம். வனங்கள், வனங்களில் உள்ள மரங்கள், விலங்குகள், பறவைகள், நீர் இவற்றையெல்லாம் குறித்து நிறைய அறிந்துவைத்துள்ளோம். அறியாத பல உயிரினங்கள் இந்த பூமியில் உண்டு. அவை செய்துகொண்டிருக்கும் பணி வியப்பூட்டக்கூடியது. உதாரணமாக, பாசிகளைச் சொல்லலாம். பாசியியல் ஆய்வாளரும் பேராசிரியருமான மு.பாலுசாமி மூலமாக நாம் பாசிகள் குறித்து ஏராளமான விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். பாசிகள் குறித்து முப்பதாண்டுகளுக்கும் மேலாக ஆய்வுசெய்து வருகிறார் இவர்.

‘‘திருச்சி மாவட்டம் முசிறி அருகேயுள்ள காட்டுபுத்தூர் என்ற கிராமம் என்னுடையது. விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவன் நான். பள்ளிக் கல்வியை எங்கள் ஊரில் இருந்த ஜமீன்தார் பள்ளியில் படித்தேன். பிறகு நாமக்கல் அரசுக் கல்லூரியில் படித்தேன். நாமக்கல் எங்கள் ஊரிலிருந்து மிக அருகில் இருந்ததால் என்னைக் கல்லூரியில் சேர்த்தார்கள், இல்லையென்றால் கல்லூரிப் படிப்பெல்லாம் படித்திருக்க மாட்டேன். இளநிலை, மற்றும் முதுநிலை அறிவியலில் தாவரவியல் எடுத்துப் படித்தேன். எம்.எஸ்ஸியில் பாசிகள் பற்றிய சிறப்பு பாடத்தைத் தேர்ந்தெடுத்தது எதேச்சையாக நடந்தது. நாமக்கல் பகுதியைச் சுற்றிலும் இருந்த கல் மலைகளில் தேங்கியிருந்த நீரில் பாசிகள் வளர்ந்திருக்கும். எனவே அந்த நன்னீர்ப் பாசிகள் குறித்து ஆய்வு செய்தேன். பின்பு, சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு படிப்பை மேற்கொண்டேன்.


நாமக்கல்லில் எனக்குப் பேராசிரியராக இருந்தவர், தமிழகத்தில் பாசியியல் துறை முன்னோடிகளில் ஒருவரான கிருஷ்ணமூர்த்தி. அவர் மூலமாக மற்றொரு முன்னோடியான பேராசிரியர் தேசிகாச்சாரி அறிமுகம் கிடைத்தது. அவர்கள் இணைந்து கடற்பாசிகள் குறித்து ஆய்வு செய்துகொண்டிருந்தனர். அந்த ஆய்வில் நானும் இணைந்தேன். இந்தியாவின் அத்தனை கடற்பகுதிகளுக்கும் சென்று பாசிகளை ஆய்வு செய்யும் வாய்ப்பு கிடைத்தது. ஆய்வுப் படிப்பை முடித்தவுடன் கிறித்தவக் கல்லூரியில் பணியில் சேர்ந்தேன். 2016ம் ஆண்டு துறைத் தலைவராக இருந்து ஓய்வுபெற்றேன். கல்லூரி நிர்வாகம் அழைத்ததன் பேரில் இப்போது மாலைக் கல்லூரியில் இயக்குநராக இருக்கிறேன்’’ என தன்னைப் பற்றிய அறிமுகம் தந்தார் பேராசிரியர்.

பாசிகள் பற்றிய பொதுப்பார்வை... அவை வேண்டாத, அழுக்குப் பொருட்கள் என்பதாகவே உள்ளது. அது உண்மையா?

‘‘பாசிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. பாசிகள் இல்லாமல் எதுவும் இல்லை என்றே சொல்லலாம். உணவுப் பொருட்கள், மருந்துகள், உயிர் எரிபொருள் போன்றவற்றின் உற்பத்தியில் பாசிகள் பயன்படுகின்றன. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வேதிப்பொருட்களின் சுத்திகரிப்பானாகவும், சூழலியலில் ஆக்ஸிஜனை தயாரிப்பதில் மிகப் பெரும் பங்காற்றிகளாகவும் பாசிகள் உள்ளன.

பாசியிலிருந்து பிரித்தெடுக்கப்படும் சோடியம் அல்ஜினேட் என்ற வேதிப்பொருள் ஐஸ்க்ரீமை கட்டியாகாமல் கூழ் போன்ற தன்மையில் வைத்திருக்க உதவுகிறது. இதே பொருளை சூப் மற்றும் அல்வா தயாரிப்பில் பயன்படுத்துகிறோம். கடைகளில் விற்பனையாகும் கெட்டித் தயிரில் இது கலக்கப்படுகிறது. டூத் பேஸ்ட்டின் கூழ் தன்மைக்கும் பாசிகளே காரணம்.

ஆமணக்குச் செடியிலிருந்து உயிர் எரிபொருள் எனப்படும் பயோ ஃப்யூல் தயாரிக்கப்படுவதை அறிவோம். அதுபோல பாசிகளிலிருந்தும் உயிர் எரிபொருள் தயாரிக்க முடியும் என கண்டறிந்திருக்கிறார்கள். ஆமணக்கு செடி வளர்ந்து, பூத்து, காய்த்து அதிலிருந்து



விதைகள் மூலம் எண்ணெய் பிரித்தெடுக்க மூன்று மாதங்களுக்கு மேலாகும். ஆனால், பாசி இரண்டு, மூன்று நாட்களில் வளர்ந்துவிடும். பாசிகளை பிழிந்து எண்ணெய் பிரித்தெடுத்துவிட்டு வெளியேற்றும் கழிவுகூட மறுபயன்பாட்டுக்கு உதவும். அதிலிருந்து பீட்டா கரோட்டின் போன்ற சத்துப் பொருட்களை பிரித்தெடுக்கலாம்'' என்கிற பாலுசாமி, கழிவு மேலாண்மையில் பாசிகளின் பங்களிப்பையும் குறிப்பிட்டார்.


''தொழிற்சாலை வேதிக் கழிவுகள் நம் சுற்றுச்சூழலுக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளன. இந்த வேதிக் கழிவுகளை பாசிகளை வைத்து சுத்திகரிக்க முடியும். முதன்முறையாக ராணிப்பேட்டையில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பாசிகளைக் கொண்டு வேதிக் கழிவுகளை சுத்திகரிக்கும் முறையை சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதேபோல, செப்டிக் டேங்கை சுத்தப்படுத்த பாசிகளைப் பயன்படுத்தலாம். எங்கள் வீட்டில் அப்படித்தான் செய்துகொண்டிருக்கிறோம். ஆக்டிசைம் என்ற பாசியை செப்டிக் டேங்க்கில் கலந்துவிட்டால், அது தெளிவான தண்ணீராக மாறிவிடும். அந்த நீரைக் கொண்டு பாசிகளை வளர்க்கலாம். செடிகளுக்கு சத்துள்ள நீராக ஊற்றலாம். இதைக் கழிவுநீர்க் குழாய்களில் பயன்படுத்தினால் கழிவுநீர் அடைப்பு என்கிற பிரச்னையே இருக்காது'' என பாசிகளால் கிடைக்கும் நடைமுறைத் தீர்வுகளை விவரிக்கிற பாலுசாமி, பாசிகள் குறித்து 25க்கும் அதிகமான ஆய்வுக் கட்டுரைகள் சமர்பித்திருக்கிறார். சென்னையில் உள்ள கிருஷ்ணமூர்த்தி பாசியியல் நிறுவனத்தின் தலைவராகவும் இவர் உள்ளார். பாசியியல் குறித்த கருத்தரங்கங்களை நடத்துகிறது இந்நிறுவனம்.

''தெற்காசிய நாடுகளில் பாசிகள் முக்கியமான உணவாகவும் உள்ளன. இந்தப் பயன்களைக் கடந்து பூமியின் உருவாக்கத்தில் பாசிகளின் பணி மகத்தானது. கார்பன் டை ஆக்ஸைடால் நிரம்பியிருந்த பூமியில் முதலில் நுண்ணுயிர்கள் தோன்றி, அதன்பின் பாசிகள் தோன்றின. பாசிகள் தோன்றிய பிறகுதான் பூமியின் வளர்ச்சி பாய்ச்சல் கண்டது. அதாவது பாசிகள் ஒளிச்சேர்க்கையின் மூலம் ஆக்ஸிஜனை வெளியிட்டு, உயிர்கள் வாழும் சூழலை உருவாக்கின. இன்றைக்கு இருக்கிற பூமி உருவாகக் காரணமே பாசிகள்தான். எல்லா சூழலிலும் எல்ல இடத்திலும் வாழ்ந்து தன்னைத் தகவமைத்துக் கொள்கிற திறன் பாசிகளுக்கு மட்டுமே உண்டு. 300 கோடி ஆண்டுகளாக அவை பூமியில் உள்ளன.

மரங்கள் மூலம் 50 சதவீத ஆக்ஸிஜன் கிடைக்கிறது. மீதமுள்ள 50 சதவீதம் பாசிகள் மூலமாகத்தான் கிடைக்கிறது. அந்த வகையில் சூழலியலில் பாசிகள் தவிர்க்க முடியாதவை. அதுபோல, கார்பனை உறிஞ்சி புவி வெப்பமயமாதலை பாசிகள் தடுக்கின்றன. எனவே எல்லா வகையிலும் பாசிகள் பயன்படுகின்றன'' என்கிறார் பேராசிரியர் பாலுசாமி.







பாசியியல் துறைக்கு இளம் தலைமுறையினர் மத்தியில் வரவேற்பு எப்படி இருக்கிறது?


''எது பேசப்படுகிறதோ, அதன்மீதே பெரும்பாலானவர்களுக்கு விருப்பம் இருக்கும். நாம்தான் குழந்தைகளுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும். பல மாணவர்கள் கட்டாயத்தின் பேரில் கல்லூரியில் இந்தத் துறையை எடுத்துப் படித்தாலும், ஆய்வு படிப்புகளுக்கு வரும்போது ஆர்வம் கொள்கிறார்கள். இதில் கற்பிக்கும் பணி, ஆய்வுப்பணி ஆகிய இரண்டு வாய்ப்புகளே உள்ளன. பாசியியல் ஆய்வுப்பணியில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. அண்மையில் ஒரு மாணவர், பழுப்பு நிறப் பாசியில் மார்பக புற்றுநோயை குணப்படுத்தும் பொருள் இருப்பதாக ஆய்வு செய்திருக்கிறார். இதுபோல பல மருந்துகள் பாசியிலிருந்து கண்டறியப்படலாம்.

இந்தியாவில் 2500க்கும் மேற்பட்ட பாசி இனங்கள் உள்ளன. அவற்றில் 10 அல்லது 15 பாசிகளைத்தான் நாம் பயன்படுத்தியிருக்கிறோம். நிறைய பேர் இந்தத் துறையை நோக்கி வரும்போது, புதிய புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்த முடியும்'' என ஆர்வம் ஏற்படுத்தி அழைக்கிறார் பாலுசாமி.

– மு.வி.நந்தினி

# எச்சரிக்கையாக இருப்பதா... நண்பர்களாக இருப்பதா?

◆ பேராசிரியர் ச. மாடசாமி




குழந்தைகள் உள்ள குடும்பங்கள் பதற்றம் நிறைந்து காணப்படுகின்றன. நடுத்தர வர்க்கக் குடும்பங்களில் இந்தப் பதற்றம் அதிகம். தன் தோழர்களோடு குழந்தை விளையாடும்போதுகூட சில வீடுகளில் பதற்றம் தெரிகிறது. விளையாட்டு முடிந்து தோழர்கள் விடைபெற்றதும், தன் குழந்தையைக் கூப்பிட்டு அம்மா சொல்கிறார்... ''உன் விளையாட்டுச் சாமான்களை எடுத்து அவுங்கதானே விளையாடுனாங்க. நீ பாத்துக்கிட்டு சும்மாதானே இருந்தே?''

குழந்தை விழிக்கிறது. அம்மா மேலும் தொடர்கிறார்... ''நீ அவ வீட்டுக்குப் போனா, அவளோட விளையாட்டுச் சாமான்களை உன் கையில் கொடுக்கிறாளா? இல்லேதானே! நீதான் எப்பவும் ஏமாளி.''

அம்மாவின் ஆதங்கம் குழந்தைக்குப் புரியவில்லை. விளையாடுவதில் கிடைக்கும் மகிழ்ச்சிதான் குழந்தைக்கு முக்கியம். யார் சாமர்த்தியசாலி என்பதில் அல்ல. ஆனால், குழந்தைகளின் விளையாட்டுக்கு இடையேயும் சாமர்த்தியத்தை எடைபோட்டுக் கொண்டிருக்கின்றன வீட்டின் கண்கள். ' ஏமாற்றும் இந்த உலகில் தங்கள் குழந்தை புத்திசாலித்தனமாய்ப் பிழைக்கிறதா?' என்பது பெரும்பாலான வீடுகளின் நிரந்தரக் கவலை.

இந்தக் கவலையைத் துரத்த, வேடிக்கையான ஒரு குழந்தைக் கதை வேண்டும். 'A Bargain For Frances' அப்படிப்பட்ட ஒரு கதை. பெற்றோர்கள் வாசிக்கவேண்டிய கதை. இந்தக் கதையில் வருபவர்கள் நம் வீட்டுக் குழந்தைகள்தான். சிறு கரடிகளாக அவர்கள் ஓவியப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

கோடைக் காலம். சிறுமி பிரான்சஸ் விளையாடக் கிளம்புகிறாள். ''அம்மா! நான் தெல்மா வீட்டுக்கு விளையாடப் போறேன்.''

அம்மா ஒரு கணம் பிரான்சஸைப் பார்க்கிறார். ''தெல்மா கூடவா? சரி, எச்சரிக்கையா விளையாடு!''

''நான் ஏன் எச்சரிக்கையா விளையாடணும்?'' – பிரான்சஸ் புரியாமல் கேட்கிறாள்.

''ஏன்னு உனக்குத் தெரியாதா? போன தடவை தெல்மா புது பூமராங் வாங்கியிருக்கான்னு விளையாடப் போனியே... ஒரு தடவையாச்சும் நீ வீசுனியா? அவ வீச வீச நீ கேட்ச் பிடிச்சே! தலையில அங்கங்க அடிபட்டுத் திரும்பி வந்தே. ஞாபகம் இருக்கா?''

''ஞாபகம் இருக்கு!''

அம்மா அத்துடன் விடுவாரா? தெல்மாவிடம் பிரான்சஸ் ஏமாந்த தருணங்களை ஒவ்வொன்றாக ஞாபகப்படுத்துகிறாள். எல்லாம் பிரான்சஸுக்கு ஞாபகத்தில் இருக்கின்றன. ஆனால், தெல்மாவுடன் விளையாடத்தான் அவளுக்குப் பிடித்திருக்கிறது. 'இன்னைக்கு டீ பார்ட்டி விளையாட்டுதான். தெல்மாவிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய அவசியமில்லை' என்று பிரான்சஸ் மனதுக்குள் நினைத்துக்கொள்கிறாள். தெல்மாவிடம் காட்ட தன் வீட்டில் இருந்த யானை, முதலை, பாம்பு பொம்மைகளை எடுத்துக்கொண்டு ஓடுகிறாள்.

தோழிகள் இருவரும் களிமண்ணில் கேக் செய்து விளையாடுகிறார்கள். பிறகு தெல்மா தன் வீட்டில் இருந்த பழைய டீ செட்டை விளையாட எடுத்து வருகிறாள். பிரான்சஸுக்கு வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்க முடிகிறதா? ''நான் ஒரு சைனா டீ செட்டை வாங்குவதற்காகக் காசு சேர்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்கிறாள்.

தெல்மா உடனே சுதாரிக்கிறாள். ''பார்! என்னுடையது அருமையான டீ செட். பிளாஸ்டிக்... உடையவே உடையாது. ஒவ்வொரு கப்பிலும் படங்கள் சிவப்பு






வண்ணத்தில்'' என்று ஒரு திட்டத்துடன் உரையாடலை நகர்த்துகிறாள்.

''இல்லை... இல்லை... நான் சொல்றது புது சைனா டீ செட். ஒவ்வொரு கப்பிலும் விதம்விதமான படங்கள் நீல வண்ணத்தில் இருக்கும்'' என்கிறாள் பிரான்சஸ்.

''சைனா டீ செட் நல்லாவே இருக்காதே! உடைஞ்சு போயிருமே'' என்று பிரான்சஸின் கனவைக் கலைக்கும் தெல்மா, ''எவ்வளவு சேத்து வச்சிருக்கே?'' என்று மெல்லத் துருவுகிறாள். தெல்மாவுக்குள் பெரியவர்கள் நுழைந்து விட்டார்கள். பிரான்சஸுக்குள் இன்னும் அது நடக்கவில்லை.

''இரண்டு டாலரும் பதினேழு சென்ட்டும் சேர்த்து வச்சிருக்கேன்'' என்று தெல்மாவிடம் தெரிவிக்கிறாள் பிரான்சஸ்.

''இதெல்லாம் பத்தாது... சைனா டீ செட் ரொம்ப விலை!'' என்று பயமுறுத்தும் தெல்மா, ''நீ வச்சிருக்க பணத்துக்கு என்னோட டீ செட்டை வாங்கிக்கறியா?'' என்று மெல்ல வலை விரிக்கிறாள்.

''இல்லை... இல்லை... எனக்கு சைனா டீ செட்தான் வேணும்'' என்று அவசரமாக மறுக்கிறாள் பிரான்சஸ். உடனே தெல்மா, ''அப்படீன்னா நீ சும்மா இருக்க வேண்டியதுதான். இப்ப சைனா டீ செட் வர்றதே இல்லை'' என்று ஒரே போடாகப் போடுகிறாள்.

தோழியை நம்பாமல் வேறு யாரை நம்புவது? அதோடு டீ செட்டுக்காக நட்பை இழப்பதா? பிரான்சஸ் வீட்டுக்கு வேகமாக ஓடிப்போய், தன் சேமிப்பை எடுத்துக்கொண்டு வந்து தெல்மாவிடம் கொடுத்துவிட்டு, அவளுடைய பழைய டீ செட்டை விலைக்கு வாங்கிக்கொள்கிறாள்.

டீ செட்டைத் தரும்போது, ''விற்ற பொருளைத் திரும்ப வாங்க மாட்டேன்'' என்று ஒரு வியாபாரி போலக் கறாராகப் பேசுகிறாள் தெல்மா. தலையாட்டுகிறாள் பிரான்சஸ்.

பிரான்சஸ் கொண்டு போன டீ செட்டைப் பார்த்ததுமே அவள் தங்கை குளோரியாவுக்குக் குமட்டிக்கொண்டு வருகிறது. ''அய்யே! இது என்ன அழுக்கு பிளாஸ்டிக் டீ செட்? நல்லாவே இல்லை. சைனா டீ செட்தான் நல்லா இருக்கும்'' என்கிறாள்.

''சைனா செட் இப்ப கிடைக்கிறது இல்லையாம்!'' என்று பிரான்சஸ் அப்பாவியாகச் சொல்ல, குளோரியாவுக்கு வந்ததே கோபம். ''யாரு சொன்னா? என் தோழி நேத்துதான் கடையில் வாங்குனா. விலை ரெண்டு டாலர் ஏழு சென்ட். அந்த டீ செட்டை அவ தெல்மா கிட்டவும் காட்டுனா. உன்கிட்ட வாங்குன காசைக் கொண்டு தெல்மா இப்ப அந்தக் கடைக்குத்தான் போயிருப்பா!''

பிரான்சஸுக்குச் சின்ன அதிர்ச்சி. தங்கையின் விவரம் தன்னிடம் இல்லை. சைனா டீ செட் விற்கும் கடைக்குப் போகிறாள். கடையின் வெளியே இருந்து கண்ணாடி வழியே பார்க்கிறாள். தங்கை சொன்னது உண்மைதான். பிரான்சஸ் கொடுத்த பணத்தில் தெல்மா தனக்கொரு புது சைனா டீ செட் வாங்கிக் கொண்டிருக்கிறாள். பிரான்சஸ் தன்னைப் பார்ப்பதை தெல்மா கவனிக்கவில்லை.

பிரான்சஸ் ஒரு யோசனையுடன் வீடு திரும்புகிறாள். தோற்றுப் போய் விட்டாளா என்ன? தந்திரங்கள் தந்திரங்களை உருவாக்குகின்றன.

தெல்மா தந்த டீ செட்டில் மூடியுடன் ஒரு சர்க்கரைக்







கிண்ணம் இருந்தது. அதற்குள் ஒரு பென்னி (காசு) போட்டு மூடுகிறாள் பிரான்சஸ். அடுத்து தெல்மாவுக்கு ஒரு போன். போனில் பிரான்சஸ் என்று தெரிந்ததுமே, ''விற்ற பொருளைத் திரும்ப வாங்க மாட்டேன்'' என்று அலறுகிறாள் தெல்மா.

''நிச்சயமாகவா?''

''நிச்சயமாகத்தான்!''

''உன் டீ செட்டை நான் திருப்பித் தர வேண்டாமா?''

''வேண்டாம்!''

''அப்படியானால் சர்க்கரைக் கிண்ணத்துக்குள் இருப்பதையும் நான் தரவேண்டாம்தானே?''

உடனே தெல்மாவுக்கு ஒரு படபடப்பு. ''அதில் என்ன இருக்கிறது பிரான்சஸ்?''

''எதுவாயிருந்தால் என்ன? நீதான் திருப்பித் தரவேண்டாம் என்று சொல்லி விட்டாயே'' என்று சொல்லி, போனைத் துண்டிக்கிறாள் பிரான்சஸ்.

நினைத்ததுபோல், துண்டித்த மறு வினாடியே போன் மணி அடிக்கிறது. தெல்மாதான். ''சர்க்கரைக் கிண்ணத்தில் என்ன இருந்தது? ஒருவேளை என் மோதிரமா?'' என்று கேட்கிறாள். பிறகு மாற்றிக் குழம்புகிறாள். ''இப்ப ஞாபகம் வருது. என் பிறந்தநாளுக்குக் கிடைத்த பணத்தை அந்தக் கிண்ணத்தில் போட்டு வைத்திருந்தேன். இரண்டு டாலர். இல்லையில்லை... அஞ்சு டாலர்!''

''சர்க்கரைக் கிண்ணத்தில் இருப்பது என்ன என்று நான் சொல்ல மாட்டேன். நீதான் விற்ற பொருளைத் திரும்ப வாங்க மாட்டேன்னு சொல்லிட்டியே'' என்கிறாள் பிரான்சஸ் நிதானமாக.

''இல்லை... இல்லை... வாங்கிக்கிறேன்'' என்கிறாள் தெல்மா.

''அப்படின்னா என் பணத்தைத் திரும்பக் கொடுத்திட்டு உன் பழைய டீ செட்டை வாங்கிக்கோ'' என்கிறாள் பிரான்சஸ்.

''என் கிட்ட பணம் இல்ல. அதுக்குப் பதிலா நீ ஆசைப்பட்ட புது சைனா டீ செட்டைத் தர்றேன். இன்னைக்குத்தான் வாங்கினேன். மிச்சப்பணம் பத்து சென்ட்டையும் தர்றேன்'' என்கிறாள் தெல்மா.

''சரி, கொண்டு வா!' என்கிறாள் பிரான்சஸ். தந்திரம் பலித்தது.

புதிய சைனா டீ செட்டையும் மிச்சப் பணத்தையும் கொண்டு வந்து தருகிறாள் தெல்மா. தன் பழைய டீ செட்டை வாங்கிக் கொண்டு, அவசரமாக சர்க்கரைக் கிண்ணத்தைத் திறந்து பார்க்கிறாள். அதற்குள் ஒரே ஒரு பென்னி (காசு) கிடந்தது. பிரான்சஸ் போட்டு வைத்த பென்னி.

''ஒரு தோழியை இப்படி தந்திரம் செய்து ஏமாற்றலாமா?'' என்று கேட்கிறாள் தெல்மா. ''நீ தந்திரம் செய்யவில்லையா?'' என்கிறாள் பிரான்சஸ்.

''சரி... இனி உன்கூட விளையாடும்போது நான் எச்சரிக்கையாய் இருக்கணும்'' என்கிறாள் தெல்மா. ''நண்பர்களாக இருப்பதுதான் சந்தோஷம். எச்சரிக்கையாக இருப்பது சந்தோஷமா?'' என்று கேள்வி கேட்கிறாள் பிரான்சஸ்.

தெல்மாவைப் பார்த்து பிரான்சஸ் மறுபடி கேட்கிறாள்: ''நண்பர்களாக இருக்கலாமா? அல்லது எச்சரிக்கையாக இருக்கலாமா?''

அந்தக் கணத்தில் தெல்மாவுக்குள் இருந்த பெரியவர்கள் வெளியேற, தெல்மா மீண்டும் குழந்தை ஆகிறாள். ''நண்பர்களாக இருப்போம். எச்சரிக்கையாக இருக்க வேண்டியதில்லை'' என்கிறாள் தெல்மா.

நண்பர்கள் கூடிக் கொள்கிறார்கள். ஸ்கிப்பிங் ஆடுகிறார்கள். பாட்டும் பாடுகிறார்கள். 'நட்புக்கு இணையில்லை... ஜாக்கிரதை தேவையில்லை!'

இந்தக் கதையில் வரும் இரண்டு வரிகள் பிரசித்தமானவை. அப்பாவி பிரான்சஸ் பேசும் பேச்சு அது:

'Being Careful is not Nice
Being Friends is Better'

குழந்தைகளின் நட்புக்கு மட்டுமல்ல... எல்லா உறவுகளுக்கும் பொருந்தக்கூடிய பேச்சு அது. தந்திரங்களால் சூழப்பட்ட உறவுகளில் உண்மையான அன்பைத் தேடும் பேச்சு. ●





2D ENTERTAINMENT
சூர்யா வழங்கும்
MEGA BLOCKBUSTER
SAKTHI FILM FACTORY RELEASE
75
வது நாள்
கார்த்தி நடிக்கும்
கடைக்குட்டி சிங்கம்
எங்கள் வீட்டு பிள்ளை
பாண்டிராஜ்
R.வேல்ராஜ் D.இமான் K.வீரசமர் B.F.A., ரூபன்
இணை தயாரிப்பு ராஜ்சேகர் கற்பூரசுந்தரபாண்டியன்
தயாரிப்பு சூர்யா
SONY MUSIC
KNACK STUDIOS
யுகபாரதி திலிப் சுப்புராயன் பிருந்தா, பாஸ்கர் ராஜாகிருஷ்ணன் பூர்ணிமா ராமசாமி நட்ராஜ் விஜி RED DOT பவன் SYNC CINEMA B.செந்தில்குமார் முருகன் ஜான்சன்

Yadhum Monthly - Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2016/69050. Day of Publishing: 01-10-2018







மதிப்பிற்குரியவர்களுக்கு...

RAMRAJ ©

காட்டன்

- வேஷ்டிகள்
- சர்ட்டுகள்
- பனியன்கள்

Shop online @ www.ramrajcotton.in

கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்

**Follow us** RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia